CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

பங்குனி மாதம் 24ம் திகதி

April 06, 2013

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 37

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## சம்பூர் சூடைக்குடாவை சுற்றிப் பார்த்தனர் சொந்த ஊர்மக்கள்

கிளிவெட்டி அகதி முகாமில் தங்கியிருந்த சுமார் நாற்பத்தெட்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த இடமான சம்பூர்..

7

## 2 இலட்சம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் தீயில்!..

கிண்ணியா மத்திய கல்லூரியின் விளையாட்டு உபகரணங் களஞ்சிய சாலை கடந்த செவ்வாய்க்-கிழமை எரிந்து சேதமாகியுள்ளது.

7

## வன்முறைகளை நிறுத்தாவிடின் ஆட்சியை இழக்க நேரிடும்

முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறையகள் தொடர்பில் அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை விரைவில் எடுக்காவிட்டால் கிழக்கின்.. ஆட்சியை அரசு இழக்க நேரிடு[7]ன்று

## நடந்தேறின கிண்ணியா கோட்டமட்ட தமிழ்மொழித் தின விழா போட்டிகள்

கிண்ணியா கல்வி வலயத்தின் கோட்ட மட்டத்திற்கான தமிழ்மொழித் தின விழாப் போட்டிகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை..

7

# தன்னார்வத் தொண்டர்களைக் கொலை செய்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துக!!

## மூதூர் படுகொலைகள்

## அக்ஷன் பெய்ம் அமைப்பு அரசிடம் மீண்டும் வேண்டுகோள்

7

## பார ஊர்தியின் 4 சக்கரங்களும் திருட்டு

### திருடிய நால்வர் கைது

திருகோணமலை தேவாநகர் பகுதியில் லொறி ஒன்றின் நான்கு டயர்களையும் திருடிய நான்கு பேரை உப்புவெளி பொலீசார்..

7

## கிழக்கு மாகாண ஆளுனருக்கு பாராட்டு!

கிழக்கு மாகாண ஆளுனர் றியர் அட்மிறல் மொஹான் விஜயவிக்கிரமவின் சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி..

7

## றிஸானாவின் குடும்பத்திற்கு நிதியுதவி

காத்தான்குடி மீடியா போரத்தினால் வெளியிடப்பட்ட "றிஸானா நபீக் தேசத்தின் புதல்வி" என்னும் நூல் மற்றும்..

7

## மகளிர்தின நிகழ்வு

### கிழக்கு மாகாண சபையால் நிகழ்த்தப்பட்டது

கிழக்கு மாகாண சபையின் மகளிர் தின நிகழ்வுகள் 03.04.2013 புதன்கிழமையன்று உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி கலை-யரங்கில் நடைபெற்றது.

7

## பாரஊர்தி மோதல்

### முச்சக்கர வண்டிச் சாரதி பலி!

திருமலையிலிருந்து கந்தளாய் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பாரஊர்தி நேருக்கு நேராக முச்சக்கரவண்டி யொன்றினை மோதி அதன் சாரதியைக் கொலை செய்துள்ளது. கந்தளாயிலிருந்து திருகோணமலையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த முச்சக்கர-வண்டியின் சாரதியான 33 வயதுடைய கந்தளாய்ப் பிரதேசத்தில் வசிப்பவரே இவ் விபத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

## அரச சேவைக்கான கிழக்கு மாகாண விதிக்கோவை தயார்

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மாகாண அரச சேவைக்கான விதிக்கோவை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை ஆளுநர் ரியல் அட்மிரால் மொஹான் விஜயவிக்கிரம தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய ஆளுநர், "இக்கையேடானது கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்-களுக்கும் நிர்வாகத்தை செம்மையாக நடைமுறைப்படுத்த செயல்படுத்த உதவும் என நம்புகிறேன்" எனக் கூறினார் ஆளுநர்.

கிழக்கு மாகாணசபையின் வரலாற்றில் முதன் முதல் நிர்வாக நடைமுறைகள் நீதி நடைமுறைகள் சம்பந்தமாக விசேட அறிவித்தல் நூலொன்றை வெளியிட்டிருக்கின்றோம் இது பாராட்டப்படக் கூடிய விடயம் எனவும் தெரிவிர்தார். மேலும் இலங்கையில் இது மூன்றாவது வெளியீடு..

7

Started on March 18, 2013
Chartered Accountancy
Full Time Course
"To be the most sought after
Professional Qualification for Business Leaders"
CAB - I Time Table: 9:00 - 12:00
Full Time Monday Tuesday & Wednesday
CAB - II Time Table: Saturday, Sunday & Poyaday
Part Time
Veal Business College. No 159A, Sea View Road, Trincomalee. 0777 555 738



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !
## மாதா, பிதா, குரு, தெய்வம்!!!

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்ற ஒழுங்கு பற்றிப் பேச்சு மேடைகளில் பேசக் கேட்டிருக்கின்றோம். மாதா, பிதா, குரு மூவரும் தெய்வமாக மதிக்கப்பட வேண்டியவர்கள் என்றோ அல்லது முதலில் மாதா, பின் பிதா, அதன் பின் குரு அதன் பின்னரே தெய்வம் என்ற மனித விழுமியத்தில் இயங்க வேண்டும் என்றோதான் இச் சொல்லாடல் இருந்திருக்க வேண்டும்.

கடவுளை விடுங்கள். இந்த ஒழுங்கில் 'குரு' வின் நிலை எப்போதோ மாறிப் போய்விட்டது. எஞ்சிக் கிடந்தது என்னவோ மாதாவும் பிதாவும் தான்.

கடந்த வாரம் எனது வைத்திய நண்பர்கள் சிலரைச் சந்தித்த போது அதிர்ச்சித் தகவல்கள் சிலவற்றை அவர்களிடமிருந்து பெறக் கூடியதாய் இருந்தது.

எழுபது வயதான தனது தாயைப் படுக்கையில் வைத்துப் பார்க்க முடியாது அவதிப்பட்ட வெளிநாட்டில் வாழ்ந்து வந்த மகனொருவர் அத் தாயைக் கருணைக் கொலை செய்யுமாறு வைத்தியரிடம் வேண்டியிருந்தாராம்.

வயதான தனது தாயை சுகயீனம் அடையும் போதெல்லாம் தனியார் வைத்தியசாலையில் அனுமதித்தவர்கள் முழுமையான சுகமடைய முன்னரே அழைத்துச் சென்று விடுவார்களாம். எனினும் பலமுறை பிழைத்தெழுந்த அந்தத் தாய் கடந்த வாரம் பிழைத்தெழவில்லை. தான் பலமுறை தடுத்தும் ஏன் அவர்கள் அத்தாயை அழைத்துப் போனார்கள் என்று அந்த வைத்தியர் வினவினார்.

மரணித்துவிட்ட தனது தகப்பனாருக்கு அந்திமக் கிரியைகள் செய்வதற்காய் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த மகனொருவர் தனது நீண்ட தலைமுடியை வெட்டுவதற்கு தயாரில்லாமல் மற்றொருவரைக் கொண்டு கொள்ளி வைத்த சம்பவம் ஒன்றும் நடந்தேறியுள்ளது.

வாழ்வின் மீது பயமாய் இருக்கின்றதா? உண்மைகள் கொஞ்சம் கசக்கத்தான் செய்யும். அதற்காக ஒட்டுமொத்தப் பிள்ளைகளும் தங்கள் வயதான பெற்றோரைக் கருணைக் கொலை செய்யப் போவதில்லை. ஆனால் பணம் என்னும் எண்ணம் மேலோங்கி நிற்கும் உலகில் நேரம் பணமாயும் பணம் நேரமாயும் மாறி மனித விழுமியங்களை தாள்களாகவும் மணிக்கூட்டு முட்களாகவும் மனிதர்கள் பார்க்கத் தொடங்கியுள்ள போது எதுவும் சாத்தியமாகும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்கு செத்துப் போய் விடுமா? இல்லை அவ்வொழுங்கைக் காப்பது எமது கைகளில் தான் இருக்கின்றது என்று எனக்குத் தோன்றுகின்றது.

குழந்தைகளை ஆரம்பம் முதலே அந்த ஒழுங்கில் வளர்க்கத் தொடங்கி விடவேண்டும். மென் மன உணர்வுகளை குழந்தையிடம் உருவாக்க முயற்சிக்க வேண்டும். அதற்காக அவர்களை கவனமாக வார்க்க வேண்டும் இவை அனைத்தும் எமது கைகளில் தான் இருக்கின்றது. அதனைச் செய்வதற்கு நாம் சில மணிநேரங்க்ளையாவது செலவு செய்வோமா?

-ஆசிரியர்-

# ஹலால் அரசினால் நியமிக்கப்பட்ட குழுவிற்குள் பிளவு

ஹலால் விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென் உருவாக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு தீர்வெதனையும் எட்டாமல் மூன்று துண்டுகளாகப் பிளவுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹலால் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நான்கு அம்ச முன்மொழிவுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் பொறுப்பைக் கொண்டு உருவாக்கப்பட்ட இவ் உபகுழுவிற்கு தலைவராக சிரேட்ட அமைச்சர் ரத்னஸ்ரீ விக்ரமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இந் நான்கு அம்ச முன்மொழிவுகளில் ஒரு முன்மொழிவை நீக்க வேண்டும் என இவ் அமைச்சரவை உபகுழுவில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, ரிசாத் பதியுதீன், பௌசி ஆகியோர் கேட்டுக்கொள்ளத் தொடங்கியவுடன் அமைச்சர்களான தினேஸ் குணவர்த்தனவும் பாட்டாளி சம்பிக்க ரணவக்கவும் அதனை எதிர்த்தனர். நம்பத்தகு தகவல்களைக் கொண்டு பொருட்களில் ஹலால் முத்திரையைப் பதிப்பதை நீக்கவேண்டும் என்ற முன்மொழிவையே அமைச்சர்கள் எதிர்த்தும் ஆதரித்தும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சொற்போரில் கலந்துகொள்ளாத சிரட்ட அமைச்சர்களான டியூ குணசேகராவும், பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் எந்த அணிக்கும் ஆதரவு தெரிவிக்காமல் உபகுழுவின் நடவடிக்கைகளிலிருந்து வெளியேறி விட்டனர்.

கட்டுப்பாட்டுக்குள் வர மறுத்த வாதப்பிரதி வாதங்களின் முடிவில் திகதி குறிப்பிடப்படாமலே அமைச்சரவைக் குழுவின் ஆயத்த அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# கந்தளாய் சொகுசு வான் களுவாஞ்சிக்குடியில் மோதி மூவர் பலி

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியைப் பார்வையிடச் சென்ற மக்களுடன் சென்ற சொகுசு வான் களுவாஞ்சிக்குடியில் விபத்துக்குள்ளானதில் அங்குள்ள மூவர் பலியாகியுள்ளனர்.

களுவாஞ்சிக்குடியின் கோட்டைக்கல்லாறு புத்தடி நாகதம்பிரான் ஆலயத்திற்கு முன்பாக நிகழ்ந்த இவ் விபத்தில் கட்டுப்பாட்டை இழந்த சொகுசு வண்டி அவ்விடத்தில் நிறுத்தி வைக்கபட்டிருந்த முச்சக்கர வண்டியை மோதியுள்ளது. பின்னர் மிதிவண்டியில் வந்த ஒரவரையும் நடந்து வந்த மற்றொருவரையும் மோதித் தள்ளியுள்ளது. விபத்துத் தளத்தில் ஒருவர் உடனடியாகவே சாவடைந்துள்ளார். ஏனைய இருவரும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலன் இன்றியே உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. சொகுசு வண்டிச் சாரதியைக் கைதுசெய்துள்ள காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஆசியமுரசு

# துபாயில் ஈழத்தமிழரைக் காப்பாற்றுங்கள் வைகோ மன்மோகனிடம் கோரிக்கை

துபாயில் வசித்துவரும் பத்தொன்பது ஈழத் தமிழர்களை அந்நாடு இலங்கைக்கு நாடுகடத்துவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வைகோ இந்தியப் பிரதமரிடம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

தூத்துக்குடியிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிப் பயணமான சட்டவிரோத குடியேற்றவாசிகளைக் கொண்ட படகொன்று சீரற்ற காலநிலையால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது துபாய்க் கப்பல் ஒன்றால் அவர்கள் காப்பாற்றப்பட்டு துபாய் நாட்டில் இறக்கி விடப்பட்டிருந்தனர். அந் நாட்டில் தற்காலிக வதிவிட அனுமதியைப் பெற்றிருந்தவர்களுள் பத்தொன்பது பேரை இலங்கைக்கு நாடு கடத்த அவ்வரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு துபாயில் தற்காலிகத் தங்குமிட அனுமதியைப் பெற்றுள்ளவர்களுள் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளர்களில் ஒருவரான ஹரினியும் உள்ளதாகத் தனது கடிதத்தில் தெரிவித்துள்ள வைகோ நாடு கடத்தல் உத்தரவை ஹரினி எதிர்கொள்வாராயின் இசைப்பிரியா என்னும் செய்தி வாசிப்பாளருக்கு என்ன நடந்ததோ அதே நிலை தான் ஹரிணிக்கும் நிகழும் எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# படகு மூலம் தமிழ்நாட்டிற்குள் வந்த ஈழத்தமிழர் மூவரின் நோக்கம் என்ன?

தமிழ்நாட்டின் பிரசித்தமான கடற்கரைப் பட்டினமான தனுஸ்கோடிக்கு அருகில் அரிச்சல் முனைப் பிரதேசத்தில் மூன்று ஈழத்தமிழ் இளைஞர்கள் வந்திறங்கியிருப்பது ஏன் எனத் தமிழ்நாட்டின் காவல்த்துறை விசாரணைகளைத் தீவிரப் படுத்தியுள்ளது.

வாகனத் தடங்களைப் பின்பற்றி முகுந்தராயர் நகரை நோக்கி இவர்கள் நடந்து செல்லும் போதே அங்கிருந்த மக்கள் அளித்த தகவலின் அடிப்படையில் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

மூவரும் தற்போதுவரை அளித்துள்ள வாக்குமூலங்களில் தம்மால் இலங்கையில் வாழமுடியாதுள்ளது என்பதற்காகப் பல விடயங்களைக் கூறியுள்ளதாகத் தெரிகின்றது.

எனினும் இவர்கள் இந்தியா ஊடாக அவுஸ்திரேலியா நோக்கிப் பயணமாகும் திட்டத்திலேயே அங்கு வந்துள்ளார்கள் என்ற சந்தேகத்திலேயே காவல்துறை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்தியக் காவல்துறையால் இவர்களிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காக அம்மூவரும் தாக்குதலுக்கு உள்ளானதாக இலங்கைப் பத்திரிகையின் இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜப்பான் பிரதித் தூதர் – மாகாண முதல்வர் சந்திப்பு

கிழக்கு மாகாண முதல்வர் நஜீப் மஜீத்தை இலங்கைக்கான ஜப்பான் நாட்டு பிரதித் தூதுவர் கிட்டோக்கி இசுகா முதலமைச்சர் பணிமனையில் சந்தித்து கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாகவும் இளைஞர் யுவதிகளின் தொழிற்பயிற்சியினை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கடந்த காலங்களில் ஜப்பான் அரசாங்கத்தினரினால் மேற்கொள்ளப்பட்ட உதவிகளுக்கான நினைவுகூர்தலும் நன்றிகளும் பறிமாறப்பட்டன.

# வெளியிடப்பட்டது பொது வித்தியாசம் ஆவணத் திரைப்படம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின்போது நடைபெற்ற செயற்பாடுகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் குறித்த ஆவணப் படம் வெளியிடப்பட்டது.

கொழும்பில் உள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச மத்திய நிலையத்திலேயே இந்த பொது வித்தியாசம் ஆவணத் திரைப்படம் வெளியிடப்பட்டது.

குறித்த பொது நெருக்கடி ஆவணத் திரைப்படம் வெளியீட்டு நிகழ்விற்கு, பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ தலைமை தாங்கியுள்ளார்.

# தமிழக மீனவர் பிரச்சனைக்கு மத்திய அரசு நடவடிக்கை ஜி. கே. வாசனிடம் மன்மோகன்சிங் உறுதி

தமிழக மீனவர் பிரச்சனை தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சரின் ஊடாக இலங்கை அரசுடன் தாமதமின்றித் தாம் கலந்துரையாடுவதாக மத்திய கடற்துறை அமைச்சர் ஜி.கே வாசனிடம் இந்தியப் பிரதமர் வாக்களித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் மார்ச் 13ல் கைதுசெய்யப்பட்டு இலங்கை நீதித்துறையிடம் கையளிக்கப்பட்ட பத்தொன்பது தமிழ்நாட்டு மீனவர்களின் தடுப்பினை இலங்கையின் நீதித்துறை மேலும் நீடித்துள்ளதைத் தொடர்ந்தே இவ்விடயம் கலந்துரையாடப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கெதிராக எழுந்துள்ள எதிர்பலைகளை மேலும் வலுப்படுத்தும் விடயமாக இம் மீனவர் பிரச்சனை காணப்படுகின்றது. இதனை தி.மு.க வும் அ.தி.மு.க வும் தமக்குச் சாதகமாக பாவித்துக் கொள்வதால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் அரசியலை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது என காங்கிரஸ் புரிந்துகொண்டுள்ளது.

# கனவில் மிரட்டும் கசாப்

தூக்கில் இடப்பட்ட அஜ்மல் கசாப், அடிக்கடி கனவில் வந்து பயமுறுத்துவதாக மும்பைத் தாக்குதலின் மற்றொரு தீவிரவாதி அபு ஜிண்டால் கூறியதைத் தொடர்ந்து அவனை வேறு சிறைக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மும்பைத் தாக்குதல் சம்பவத்தில் ஜிண்டாலுக்கு முக்கியத் தொடர்பு உள்ளது என்று கசாப் கூறினான். கசாப் தூக்கில் இடப்பட்ட பின்னர், அவன் அடைக்கப்பட்ட தனி சிறையில் ஜிண்டால் அடைக்கப்பட்டு இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்டைக் குடியுரிமை பெறும் இலங்கையர்கள்

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கையர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் முதல் இரட்டை குடியுரிமையை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக புதிய சட்டதிருத்தங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும். இவ் இரட்டை குடியுரிமையை வழங்கும்போது நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் குறிப்பிடுகின்றது. கடந்த பல மாதங்களாக இரட்டைக் குடியுரிமை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்மஸ் தீவிலிருந்து 20 இலங்கையர் நாடு திரும்பினர்

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலிருந்து இலங்கையை சேர்ந்த இருபது புகலிடக் கோரிக்கையாளர்கள் கடந்த வாரம், புதன்கிழமை திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரெண்டன் ஓகொனார் தெரிவித்துள்ளார்.

இவர்கள் கட்டாயத்தின் போரில் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் இவர்களுக்கு இங்கு தங்குவதற்கு சட்ட உரிமை இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேசமுரசு

# பொதுபல சேனாவின் கடிதத் தலைப்பில் மிரட்டல் இலத்தினியல் அஞ்சல்கள்

### குற்றப்புலனாய்விடம் பொதுபல சேனா முறையீடு

பொதுபலசேனாவின் கடிதத் தலைப்பில் மிரட்டல் கடிதங்கள் மின்னஞ்சல் ஊடாக உலவத் தொடங்கியுள்ளன. இவ்வாறு விடப்படும் மிரட்டல் கடிதங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என பொதுபல சேனா தெரிவித்துள்ளதுடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலும் இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடொன்றைச் செய்துள்ளது.

முஸ்லிம் பெண்கள் பர்தா (நிஹாப்) அணிந்துவருவதைக் கண்டால் பொதுமக்கள் அவ்வுடையைக் களைய வேண்டும் எனும் கோரிக்கையுடன் கூடிய கடிதங்களே மின்னஞ்சல் ஊடாக உலாவரத் தொடங்கியுள்ளன.

பொதுபலசேனாவின் செயலாளர் இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் தம்மைப் பொதுபல சேனாவின் அங்கத்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலர் தமது அமைப்பை இழிவுபடுத்தும் இவ்வகையான செயல்களைச் செய்துவருகின்றனர் எனத் தெரிவித்தார். நிஹாப் தொடர்பான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல்களையே தாம் ஆரம்பித்திருந்ததாகவும் ஏனெனில் அவ்வுடை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தெமட்டக்கொட பிரதேசத்தின் சில பள்ளிவாயல்களுக்கு மிரட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர்கள் தமிழ்க் கைதிகளை சந்தித்தனர்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் தமிழ்க் கைதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பு மகசீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளையே சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் சந்தித்துள்ளனர். இச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை சிறைச்சாலை ஆணையாளர் சந்திரரட்ன பல்லேகம் செய்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை பார்வையிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை விடுத்துவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டோர் – களுத்துறையில் கைது –

சட்ட விரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 38 பேர் கடற்படையினரால் 4.4.2013 அன்று களுத்துறை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு 5.4.2013 அன்று குற்றப் புலனாய்வு தரப்பிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதில் 35 தமிழர்களும், 2 சிங்களவர்களும், 1 முஸ்லிமும் உள்ளடங்குகின்ற நிலையில் 24 ஆண்களும், 5 பெற்களும் மற்றும் 9 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

*வி. மைக்கல் கொலின்*

# வரலாற்றில் வாழ்தல்

மலைமுரசு 23வது இதழில் திரு. தில்லைநாதன் பவித்ரன் எழுதிய "126வது ஆண்டிலாவது கைகூடுமா கலை இலக்கிய வாதிகளின் ஒற்றுமை" என்ற கட்டுரை தொடர்பாக, அது தவறவிட்ட பல இலக்கிய தகவல்கள் தொடர்பாக நான் எழுதிய எதிர்வினை மலைமுரசு 28, 29, 30 ஆகிய இதழ்களில் "வரலாற்றை பேசுதல்" என்ற தலைப்பில் மூன்று வாரங்களாக தொடராக வந்தது. இதற்குப் பதிலாக மிக ஆவேசமாக மூன்று வாரங்கள் மூன்று தலைப்புக்களில் 31, 32, 33வது மலைமுரசு இதழ்களில் பவித்ரன் எழுதிய எழுத்துக்கள் எனது எதிர்வினைக்கு பதில் கூறுவதை விடுத்து தனிப்பட்ட முறையில் என்னை தாக்கும் நோக்கில் அவரது எழுத்துக்கள் திசைமாறி சென்றிருந்தது.

அவரது அலட்டல் குறித்தும், அவரது புரிதலின் போதாமை குறித்தும் நான் அக்கறைப்பட்டிருக்கவில்லை. ஆனால் இன்றைய எழுத்து நாளைய வரலாறு. எனவே வரலாற்றை திரிபுபடுத்தும் பவித்ரன் போன்றவர்களுக்கு வரலாற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டிய தேவை இருப்பதன் காரணமாகவும் எனது இலக்கிய நண்பர்களின் அன்பான வேண்டுகோள்களை தட்ட முடியாததன் காரணமாகவும் சில விடயங்களை தெளிவுபடுத்த வேண்டிய தேவையின் காரணமாக இந்த எதிர்வினையை ஆற்ற முயல்கிறேன்.

திருவள்ளுவரையும், கலீல் ஜிப்ரானையும் துணைக்கழைத்துக்கொண்டு அவர் ஆற்றிய எதிர்வினையின் முதல் பந்தி இப்படி தொடங்குகிறது.

"மூன்று வராமாக வரலாற்றைப் பேசி தற்போதுதான் ஆழ்ந்த பெருமூச்சு விட்டிருப்பார்போலும் திரு. மைக்கல் கொலின். இவ் ஆசுவாசப் பெருமூச்சுடனே எனது நெஞ்சு தழுவிய நன்றிகளையும் இனிச் சேர்த்துச் சுவாசிப்பதற்காய் தெரிவித்துக் கொள்கிறேன். எனது கட்டுரையில் நான் தவறவிட்ட விடயங்களை எனக்குச் சுட்டிக்காட்டியது மட்டுமன்றி ஊரறியவும் செய்திருக்கிறார். மிக்க நன்றி"

உண்மையில் இந்த பந்தியுடன் எனது எதிர்வினையின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஏனென்றால் நான் சொல்லவந்த விடயத்தை, அவர் தவறவிட்ட பல விடயங்ளை நான் சுட்டிக்காட்டியதை அவரே ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டு அதன் பின்னால் அவர் தொடர்ந்த அத்தனை எழுத்துக்களும் தனிப்பட்ட முறையில் என்னை தாக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது புலனாகிறது.

முதலில் பவித்ரனுக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விடும்புகிறேன். *நான் எழுதியது அவரது கட்டுரைக்கான எதிர்வினையே அன்றி ஆய்வுக் கட்டுரை அல்ல. அதுவும் நுனிப்புல் மேய்ந்துவிட்டு திருகோணமலை கலை இலக்கியம் தொடர்பாக தரவுப்பிழைகளோடும், தகவல் பிழைகளோடும். எழுதத்துணியும் பவித்ரன் போன்றவர்களுக்கு இனிமேலாவது ஆழ்ந்து படித்துவிட்டு, வரலாற்றை அறிந்துவிட்டு எழுதுங்கள் என்பதுவே. ஏனென்றால் இங்கு பலர் வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வரலாறாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த உண்மையை எவராலும் மறுக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது!..*

நான் எழுதிய எதிர்வினையில் 28வது பந்திகளில் 14 பந்திகள் என்னைப்பற்றி நானே எழுதியுள்ளதாக குறிப்பிடும் பவித்ரனின் வாசிப்புத் திறன் தொடர்பாகவே எனக்கு சந்தேசம் எழுகின்றது. இப்படியான ஒரு கத்துக்குட்டியின் எழுத்துக்கா 'எதிர்வினை' எழுதினேன் என்று நினைக்கையில் உண்மையாகவே வெட்கப்படுகின்றேன். என்பது எதிர்வினையில் உள்ள பந்திகளை எண்ணிய பவித்ரன் அது கூறவந்த உண்மைகளை தெளிவுற புரிந்து கொள்ளாமையின் காரணமாகவே தனது அலட்டல்களை தொடர்ந்தாரா? இல்லை தான் 'மலைமுரசு' உதவி ஆசிரியர் எனவே எதனையும் எழுதலாம் என்ற நிலையில் எழுதினாரோ தெரியவில்லை. பவித்ரன் குறிப்பிட்ட 14 பந்திகளில் 8 பந்திகள் திரு. திருமலை நவம் அவர்கள் எழுதிய "திருகோண-மலை கலை இலக்கிய வரலாறு" என்ற நூலில் பக்கம் - 233ல் அவர் 'தாகம் கலை இலக்கிய வட்டம்' பற்றி குறிப்பிட்ட எழுத்துக்களே அன்றி எனதல்ல. அந்த நூலில் குறிப்பிடப்பட்டிராத ஏனைய விடயங்கள் தொடர்பாக அதுவும் 'தாகம் கலை இலக்கிய வட்டம்' என்ற அமைப்பு தொடர்பாகவே குறிப்பிட்டிருந்தேனே ஒழிய தனிப்பட்ட எனது செயற்பாடுகள் பற்றியல்ல. என்னை முன்னிறுத்தி தான் எழுதியிருந்தால் (எழுதினாலும் எந்த கொம்பனும் கேட்க முடியாது) தாகம் கலை இலக்கிய வட்டம், தாகம் வெளியீட்டகம் போன்றே அக்காலத்தில் (1985 - 1993) 'தாகம் பைன் ஆர்ட்ஸ் அக்கடமி' (Thaaham fine Arts Achadamy) என்ற பெயரில் நான் நிர்வாகியாக இருந்தது செயற்படுத்திய அமைப்பு தொடர்பாகவும் குறிப்பிட்டிருக்க வேண்டும். இது நான் மட்டுமே சார்ந்த எனது தனிப்பட்ட அமைப்பு எனது தனிப்பட்ட முயற்சியாக இருந்தது.

'தாகம் பைன் ஆர்ட்ஸ் அக்கடமி' திருகோணமலையில் முதன் முறையாக ஒரு திரைப்படவிழாவை நடாத்தி சத்தியஜித்ரேயின் "பதேர்பாஞ்சாலி, சட்கதி" போன்ற திரைப்படங்களை முன்னர் செயற்பாட்டில் இருந்த 'சரஸ்வதி B' சினிமா அரங்கில் நடாத்தியது. இப்படி பல நிகழ்வுகள், இது எனது தனிப்பட்ட முயற்சி. இது தொடர்பாக நான் குறிப்பிட்டிருக்கவில்லை. இந்த வரலாறு எல்லாம் பவித்ரனுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனென்றால் இது திருகோணமலை நகரத்தில் நடைபெற்ற நிகழ்வுகள். மூதூரைச் சேர்ந்த பவித்ரன் இதை அறிந்திருக்க மாட்டார். இப்படியாக வரலாற்றை பேச நிறையவே உண்டு. ஏனெனில் வரலாற்றின் காலகட்டத்தில் திருகோணமலை மண்ணில் வாழ்ந்தவன் நான். இவைகளை விடுத்து நான் குறிப்பிட்டிருந்தது அவரது கட்டுரையில் குறிப்பிட்ட அமைப்பு ரீதியான செயற்பாடுகள் பற்றியே.

*எனது 'தாகம் கலை இலக்கிய வட்டம்' தொடர்பாக மட்டுமே அதிகம் கதைத்த நான் ஏனைய அமைப்புக்கள் தொடர்பாக அதிகம் பேசவில்லை எனக்கூறும் பவித்ரனுக்கு மீண்டும் நான் கூறிக்கொள்வது, நான் ஆய்வுக் கட்டுரை எழுத வரவில்லை. அவரது கட்டுரையில் தவறவிட்ட சில செய்திகளை சொல்வதே எனது நோக்கம். அதுவும் எனது 'குலப்பெருமை'யின் காரணமாக வார்த்தைகளை மிகவும் ஜாக்கிரதையாக தேர்ந்தெடுத்து எனது எதிர்வினை சம்பந்தப்பட்டவரை எந்த விதத்திலும் மனதளவில் பாதித்து விடக்கூடாது என்ற நிலையிலேயே எழுதியிருந்தேன். எனது எதிர்வினையினை வாசித்தவர்களுக்கு இது புரியும். மேலும் குறித்த அமைப்பில் 'திருவள்ளுவர் சபை' தொடர்பாக நான் அதிகம் எழுதியிருந்தால் - (சபையின் செயலாளர் நானே) பவித்ரன் அதனையும் குறிப்பிட்டு தற்பெருமை பேசுவதாக வரலாற்றில் இடம் தேடுவதாக குறிப்பிட்டிருப்பார்.. மற்றும் திருகோணமலை கலைவட்டம் தொடர்பாக எழுதுவதற்கு குறித்த அமைப்பை நடாத்திய சசிகுமார், தில்லைக்குமரன் இருவரும் தற்போதும் திருகோணமலையிலேயே உள்ளனர். அவர்கள் அமைப்பின் செயற்பாடுகள் பற்றி அதிகம் எழுதவேண்டியது அவர்களே. நான் அல்ல!..*

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சென்ற வாரம்...*
*தந்தை சொல்லக் கேட்கக் கேட்க பேதைமனம் துயரம்... பயம்... ஏமாற்றம்.... மகிழ்ச்சி... போன்ற உணர்ச்சிகளால் கதிகலங்கிப் போனது.*

அவரே கூறியது போல அவர் சாதாரண வீரராக இருந்திருக்கக் கூடாதா? அவரோடு பாடி மகிழ்ந்த இந்தக்காலத்துக்குள் என்னென்ன தவறுகள் செய்து அபச்சாரம் தேடிக் கொண்டேனோ....?' இவற்றிற்கெல்லாம் எப்படி பிராயச்சித்தம் செய்வேனோ...? அவரை நெருங்கும் தகுதி எனக்கு உண்டா? என்ற கலக்கமும், பயமும் அதே சமயம் என் மனதைக் கவர்ந்தவர் ஒரு தளபதி, என்று எண்ணும் போது மகிழ்ச்சியும் மாறி மாறி தோன்றி அவளை திக்கு முக்காட வைத்தன. இந்த குழப்ப உணர்வுடன் வீட்டினுள் நுழைந்தவள் நேரே அறைக்குள் சென்று படுக்கையில் விழுந்தாள்.

அவளது ஒவ்வொரு அசைவையும் அவதானித்தபடி உட்கட்டிலில் இருந்த அவளது அத்தை மீனாட்சி கதவடியில் போய் நின்று ரங்கநாயகி ஏதாவது சாப்பிட்டுவிட்டு படு அம்மா என்று குரல் கொடுத்தாள். நாதஸ்வரக்காரரின் மனைவி இறக்கும் முன்பே கணவனை இழந்த அவரது தங்கை மீனாட்சி, அந்த குடும்பத்திற்கு பேருதவியாக இருந்து வந்தாள். அண்ணியார் காலமான பிறகு, குடும்பப் பொறுப்பெல்லாம் அவளே ஏற்றுக்-கொண்டிருந்தாள். இதனால்தான் வயது வந்த பெண்ணான ரங்கநாயகி எந்தக்கவலையுமின்றி வீட்டுக்கும், ஆற்றுக்கும் இடையில் மான்குட்டி போல் துள்ளித்திரிய முடிந்தது.

எனக்குப் பசிக்கவில்லை அத்தை என்னதான் பிரச்சினை இருந்தாலும் வெறும் வயிற்றோடு படுக்காத பிள்ள. பால் காய்ச்சித் தரமட்டுமா? பால் குடிச்சால்மட்டும் நித்திரை வந்துவிடுமாக்கும். என்னைச் சும்மா விட்டுவிடுங்கள் அத்தை. வயதானபிள்ளையை அப்படி விட்டு-விடலாமா? பொறு நான் பால் காய்ச்சி வருகின்றேன். அவள் அப்படி சொன்னபிறகு பாலைக்குடிக்காமல் இருக்கமுடியாது என்று ரங்கநாயகிக்கு தெரியும். பொறுத்திருந்து பாலைக்குடித்துவிட்டு படுக்கையில் சரிந்தாள். மனம் ஓய மறுத்தது. இனி என்ன செய்வது. அப்பா சொல்வதைப் பார்த்தால் அவரைத் துணைவராக அடைவது இந்த ஜென்மத்தில் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத காரியம். அவர் என்னிடம் தன்னைப்பற்றிய உண்மையை மறைத்திருக்கவே கூடாது என்றும் கோபப்படவும் செய்தாள். ஒன்றும் அறியாத என் மனதை குழப்பி... ஏன்? அவர் உண்மையைச் சொல்லியிருந்தால் அவருடைய உறவை அன்றே வெட்டியிருப்பேன் அப்படிச் செய்திருந்தால் அந்த உன்னத புருசனின் அன்பு எனக்கு கிடைத்திருக்குமா?

யாரிடம் சொல்லி ஆறுதல் தேடுவது? அப்பாவோடு இனிப்பேசி பயனில்லை என்று தெரியும். அவர் சுலபத்தில் முடிவெடுப்பதில்லை. எந்த முடிவையும் மாற்றியதில்லை. அத்தை ... இதெல்லாம் அவளுக்குச் சரிப்படாது. இனி குடமுருட்டியாற்றை மறந்துவிட வேண்டியதுதான். குடமுருட்டியாற்றுக்கு மட்டுமல்ல வெண்மணற்பரப்பு, வாழைத் தோட்டம், ஏன் வெண்புரவிக்கு கூட கும்பிடு போட்டுவிட வேண்டும். படுக்கையில் புரண்டாள். புரவி என்றதுமே குமரன் நெஞ்சை நிறைத்தான். குடமுருட்டியாற்றுக்கு போகாமல் விடும் உறுதி எனக்கு இருக்கிறதா?

எதற்கும் நாளை கடைசியாக ஒருதடவை அவரைப்பார்த்து பேசிவிட்டு வந்து விடவேண்டும். கிட்டாதாயின்

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 10

## வரலாற்று நாவல்

வெட்டென மறக்கவேண்டியதுதான் அவளால் இரவு முழுவதும் உறங்க முடியவில்லை எப்போது விடியு மென்றிருந்தது.

கோட்டைக்குள் படுத்திருந்த உதயகுமரனுடைய நிலையும் ஏறத்தாழ இதேதான். அன்று மாலையில் குடமுருட்டியாற்று கரையினின்றும் மிக சந்தோசமாகத்தான் திரும்பியிருந்தான். ஆனால் ஏனோ தெரியவில்லை கோட்டையை அண்மித்தபோது அதற்குள் போகவேண்டாம் என்று இருந்தது. அவன் வருகைக்காக காத்திருக்கும் வீரர்களை ஏமாற்றக் கூடாது என்று கோட்டைக்குள் நுழைந்து ஏதோ எந்திரம்போல் இரா உணவுவரை அலுவல்களை முடித்துவிட்டு தன் அறைக்குள் நுழைந்து, கதவை அடைத்துவிட்டு கட்டிலில் விழுந்தான். மனம் அமைதியடையாமல் இருந்தது. இன்று ஏன் இந்தக் குழப்பம். மாலையில் ரங்கநாயகியுடன் கதைத்துவிட்டு வரும்போதுகூட நன்றாகத்தானே இருந்தேன்? அவளது நினைப்பு இன்னும் வாட்டியது. கலைவாணியே நேரில் வந்தது போன்ற தோற்றம் உள்ள அவள் எனக்கு கிடைப்பாளா?, சாதாரண வீரனல்ல நான்.... கோட்டைத்தளபதி என்று தெரிந்து கொண்டாள் என்றால், நான் உண்மையை மறைத்ததிற்காக என்மீது கோபம் கொள்ளமாட்டாளா? எப்படி இருந்தாலும் அவளின்றி நான் இல்லை என்பதே உறுதி. இருப்பினும் தடைகள் பல தாண்டவேண்டி இருக்கிறதே! என்று ஒவ்வொரு சிக்கலாகப் பட்டியல் போட்டு எடைபோட்டான்.

ஒன்று எனது குலம்... நான் ராஜகுலத்தினன்.. ஒரு நட்டுவகுலப் பெண்ணை திருமணம் செய்ய அரச குடும்பம் என்றுமே சம்மதிக்கப்-போவதில்லை. அடுத்தது, அன்னை இரத்தினாவதிதேவி இதற்கு ஒருபோதும் சம்மதிக்கப்போவதில்லை, மன்னர்... அவருக்கென்று சில கொள்கைகள், அரச குடும்பம் பற்றிய கனவுகள், தனது சாம்ராச்சியம் தொடர்பாக எங்கள் ஒவ்வொருவர்மீதும் நம்பிக்கை வைத்து தீட்டியிருக்கும் திட்டங்கள்... இவர்களுக்காக என் எதிர்காலத்தை இழக்க வேண்டியதுதானா? என் மனம் கவர்ந்த தேவதையை மறந்து வாழத்தான் வேண்டுமா? எண்ணவே முடியாமல் இருக்கும் இந்த உறவின் பிரிவை எப்படி நிஜமாக எண்ணால் தாங்கிக் கொள்ளமுடியும்?

புதிய பிரதேசம் என்று இயற்கை எழிலை அள்ளிப்பருகிக் கட்டில்லாக் காளைபோல கட்டிளங்காளை நான் மகிழ்ந்து திரிந்தேனே... இச்சிறு பெண்ணைக் கண்டது முதல் மன நிம்மதியைப் பறிகொடுத்துவிட்டேனே! படுக்கை முள்ளாய் குத்தியது. கட்டிலில் இருந்து எழும்பி ஜன்னலுக்கு தாவினான். விண்மீன்கள் துயிலாது காவல் செய்தன.

*தொடரும்...*




# வரலாற்றில் திருக்கோணமலையல்ல: திருகோணமலையே வாழும்...

"மலை" என்பதற்கு முன்னால் உள்ள எழுத்துக்கள் சிதைவடைந்த படியால் அதை செ.இ.குணசிங்கம் அவர்கள் "கோணமாமலை" என்றும் சி.பத்மநாதன் அவர்கள் "திருகோண மலை" யென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இரண்டின் வரலாற்று பொருள் ஒன்று என்பதால் அதுபற்றி அவர்கள் பெரிதும் கவனிக்கவில்லை. "மலை" என்பது மட்டுமெ தெளிவாக உள்ளதால் கோணமாமலையா? திருகோண-மலையா? திருக்கோணமலையா? என்ற பெயர் தொடர்பில் இது நமக்கு வழிகாட்டாது. ஆயினும் கோணேசர் கோவிலின்றும் திருகோணமலையை தனித்து குறிப்பிடப்பட்டுள்ளத என்பதை அறியமுடியும்.

அடுத்து சான்று நிலாவெளிக் கல்வெட்டாகும். திருகோணமலை திருக்கோணமலை பற்றிய விவாதத்தில் மிகமுக்கியமான சான்றாக இது அமைகிறது. நிலாவெளி பிள்ளையார் கோயில் கிணற்றின் படிக்கட்டாக அமைந்துள்ள இக்கல்வெட்டையும் நான் முன்பு குறிப்பிட்ட வரலாற்றறிஞர்கள் வாசித்து ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர். இச்சாசனத்தை காலநிதி.செ.குணசிங்கம் 11ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திற்-குரியதாகவும் கலாநிதி.கா.இந்திரபாலா 10ம் நூற்றாண்டிற்குரியதாகவும் கொள்கின்றனர்.

பேராசிரியர். சி. பத்மநாதனும் இக்கல்வெட்டு 10ம் 11ம் நூற்றாண்டிற்குரியது என்கிறார்13.

பேராசிரியர். சி. பத்மநாதன் இக்கல்வெட்டின் வாசகத்தை "இலங்கைத் தமிழ் சாசனங்கள்" என்ற நூலில் 406ம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

ஸ் (வஸ்தி ஸ்ரீ)...
சா ஸநம் சாஸ்வத ம் ம்பு ஸ்ரீ
கோணபர்வத ம் திருகோண
மலை மத்ஸ்யகேஸ்வரமுடைய மஹா
தே வற்கு நிச்சலழிவு
க்கு நிவந்தமாக சந்தராதித்தவற் செய்த
உராகிரிகாம கி(ரி)
கண்ட கிரிகாமம் நீர் நிலமும் புன்செய்யும்
இடமும்
ஊர்ரிருக்கையும் தே வாலயமும் மே
நோக்கிய ம
ரமும் கீழ் னொக்கிந கிணறும் உட்பட்ட
இந்நிலத்து
க் கெல்லை கிழக்குக் கழி எல்லை
தெற்கெல்லை க
ல்லு குடக்கு எத்தகம்பே எல்லை
வடக்கெல்
லை சூலக்கல்லாகும் சுடர் கோணமா
மலை தனி
ல் நீலகண்டர் (க்)கு நிலம் இவ்விசைத்த
பெருநான்
கெல்லையிலகப்பட்ட நிலம் இருநூற்று
ஐம்பத்திற்று வேலி இது பந்மா யே
ஸ்வரரக்ஷை

கலாநிதி செ.குணசிங்கம் அவர்களது வாசிப்பின் சாரத்தை கலாநிதி.க.சரவணபவன் "வரலாற்றுத் திருகோணம[illegible] பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீ கோணபர்வத ம் திருகோண
மலை மச்ச கேஸ்வரமுடைய
மகாதேவர்க்கு நிச்சலழி
வுக்கு நிவந்தமாக சந்தராதித்தவற்
செய்த உராகிரிகாம, கிரி
கண்ட கிரிகாமம் நீர் நிலமும்
புன்செய்யும்
தேவாலயமும் மேனோக்கின் மரமும்
கீழ் நோக்கின் கிண்றும் உட்பட
இந்நிலத்துக் கெல்லை தெற்கெல்லை
கல்லு குடக்கு எத்தகம்பே எல்லை
வடக்கெல்லை சூலக்கல்லாகும் சுடர்
கோணமாமலை தனில்
நீலகண்டருக்குரிய நிலம் இவ்விசைத்த
பெருநான்
கெல்லையில் அகப்பட்ட நிலம்
இருநூற்று
ஐம்பத்திற்று வேலி இது பன்மயே
சுரரட்ஸ

செ.குணசிங்கத்தின் வாசிப்பாக க.சரவணபவனின் நூலிலுள்ள பந்தியில் சி.பத்மநாதன் வாசிப்பில் உள்ள சில வரிகள விடப்பட்டுள்ளன. ஆயினும் அவை நம்முடைய பேசுபொருளுக்கு சம்பந்தமில்லாதவை எனவே நமக்கு ஒத்திசைவானவற்றைப் பற்றி பார்ப்போம்.

இக்கல்வெட்டின் விளக்க வாசகம் வருமாறு...
"கிழக்கே கடல், மேற்கே எட்டம்பே, வடக்கே சூலம் பொறிக்கப்பட்ட எல்லைக் கல், தெற்கே எல்லைக்கல் என்பன எல்லையாகக் கொண்ட, உரகிரிகாமம், கிரிகண்டகாமத்து பாசன நிலமும், வானம் பார்த்த நிலமும் அது உள்ளடக்கியுள்ள தேவாலயமும், மரங்களும், கிணறுகளும் திருகோண-மலையிலுள்ள மச்சகேஸ்வரத்து மகேஸ்வரருடைய தினப் பூசைச் செலவுக்காக சூரியனும் சந்திரனும் உள்ளவரை நிலதானம் செய்யப்-படகின்றது. நான்கு எல்லைகளுக்குள் அடங்கிய இந்த இருநூற்றி ஐம்பது வேலி நிலமும் கோணமாமலையில் வீற்றிருக்கும் நீல கண்டத்தை உடைய சிவனுக்குரியதாகும். இந்த நிலதானம் திருக்கோணேஸ்வரத்து அறங்-காவலர்களான சிவனடியார்கள் குழுவின் பாதுகாப்பில் இருக்கும்."

செ. குணசிங்கம், சிஇபத்மநாதன் ஆகிய இருவரதும் வாசிப்பில் "திருகோணமலை மச்சகேஸ்வரமுடைய" என்ற வரி தெளிவாக உள்ளது. "திருகோணமலை" "கோணமாமலை" என்ற பெயர்கள் இக்கல்வெட்டில் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருப்பதை இரு அறிஞர்களும் ஏற்றுக்-கொண்டுள்ளனர்.

கவனிக்க "திருக்கோணமலை" அல்ல "திருகோணமலை" என்றே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. திருகோணமலை மச்சகேஸ்வரம் எனக்குறிப்பிடப்-படுவதனால் "திருகோணமலை" என்பது கோணேசர் கோயிலை குறிக்காமல் அது அமைந்துள்ள ஊரைக்குறிக்கிறது. கோணேசர் கோயில் "மச்சசேஸ்வரம்" எனக்குறிப்பிடப்படுகின்றது. அதே போல் "கோணமாமலை தனில் நீலகண்டர்க்கு" என்ற வரிமூலம் "மச்சகேஸ்வரம்" அமைந்ததுள்ள மலையின் பெயர் கோணமாமலை எனப்பட்டதை அறியலாம். 7ம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தரும் "கோணமாமலை அமர்ந்தாரே" என்று திருக்கோணேஸ்-வரம் அமைந்துள்ளது கோணமாமலை என்பதை குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து 7ம் நூற்றாண்டில் திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள இடத்தின் பெயர் மாறாமலே 11ம் நூற்றாண்டிலும் இருந்துள்ளதை அறியலாம்.

*(இன்னும் நடுவோம்)*

**சத்தியன்**

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**
**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**
**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## சிற்றாயுத உலக வர்த்தகத்தை ஒழுங்கமைக்கும் ஐநாவின் ஒப்பந்தம்

சிற்றாயுத வியாபார வர்த்தகத்தை உலகலாவிய அடிப்படையில் ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வருவதற்கான ஒப்பந்தத்தை ஐ.நா உருவாக்கியுள்ளது

இவ் ஒப்பந்தங்களின் சரத்துக்களில் பாரம்பரிய ஆயுதங்களை சட்ட விரோதமான வகையில் வர்த்தகம் செய்வதைத் தடுப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிப்புக்கள் நடைபெற்று வெற்றியடைந்துள்ளன.

இவ்வொப்பந்தம் வெற்றிகரமாக உருவாக வேண்டுமாயின் அமெரிக்கா மற்றும் இரஸ்யாவின் ஆதரவு தேவையாய் இருந்தது. ஏனெனில் இவ்விரு நாடுகளுமே சிற்றாயுத வியாபாரத்தின் பெரும் பங்கைத் தமது கட்டுப்பாட்டுள்ளுள் வைத்திருக்கின்றன என்பதுடன் இவ்வகைக் கலந்துரையாடல் ஒன்று கடந்த வருடம் யூலை மாதம் நிகழ்ந்த போதும் இவ்விரு நாடுகளின் ஆதரவின்மையால் வெற்றியின்றி நிறைவுற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இம்முறை கடுமையான உள்ளக எதிர்ப்பைச் சட்டை செய்யாமல் அமெரிக்கா இவ் ஒப்பந்தத்தை ஆதரிக்கும் முடிவை வெளியிட்ட போதே இவ்வொப்பந்தம் வெற்றியடையும் சாத்தியங்கள் இருந்தன. சிரியா, ஈரான் வடகொரியா ஆகிய மூன்று நாடுகளும் எதிர்த்து வாக்களித்திருந்த இவ்வொப்பந்தத்தை ஆதரித்து 154 நாடுகள் வாக்களித்திருந்தன. எனினும் 23 நாடுகள் வாக்களிப்பிற் கலந்து கொள்ளாமல் தள்ளியிருந்தன.


## மூளையைத் தானம் செய்யுங்கள் விஞ்ஞானிகள் வேண்டுகோள்!

மனஅழுத்தத் தெளிவு நாள் ஐ.நா வின் உதவியுடன் உலகம் அனுசரிக்கத் தயாராகியுள்ள இவ் வேளையில் மனஅழுத்தமானது முன்னர் கூறப்பட்ட அளவினை விட மிக அதிகமான அளவில் மனிதரிடையே காணப்படுவதாக ஐக்கிய இராச்சிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மனஅழுத்தமானது ஒரு நோயாக மனிதரிடையே பரவி வருகின்றது என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


ஐ.நா வின் ஆதரவுடன் அனுசரிக்கப்படவுள்ள மனஅழுத்தத் தெளிவு நாளில் உலகிலுள்ள மக்கள் யாவரும் மனஅழுத்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு தமது மூளைகளை மரணத்தின் பின் தானமாகத் தருவது பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மனஅழுத்தம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு போதுமான அளவு மனித மூளைகள் கிடைப்பதில்லை என்று விஞ்ஞானிகள் குறைப்பட்டுக் கொண்டனர்.



## மரபணுக் குறைபாடுகளைக் களைந்து குழந்தையை உருவாக்கும் முயற்சியில் வெற்றி – ஐக்கிய இராச்சிய ஆராய்ச்சியாளர்கள் –

மரபணுக் குறைபாடுகளைக் கொண்ட பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளின் மரபணுக்களில் செயற்கை மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாக குறைபாடற்ற குழந்தைகளை உருவாக்க முடியும் என ஐக்கியராச்சிய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.




இவ்வாறு உருவாக்குவதற்கு மூன்று மானிடர்களின் உயிர்மங்கள் (cellular materials)தேவைப்படும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இம்முறையின் ஊடாக கருக்களில் உள்ள பலவீனமான இழையமணிகளை நீக்கிவிட்டு பலம்வாய்ந்த இழைய மணிகளை கருக்கட்டலுக்குப் பாவிக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். கருக்கட்டலின் போது பலவீனமான இழையமணிகளின் தாக்கத்தினால் பிறக்கும் குழந்தைகள் பலவீனமான தசைகளுடன், பார்வைக் குறைபாடுகளுடன், செவிட்டுத் தன்மைகளுடன், காக்கைவலிப்பு, மாரடைப்பு போன்ற நோய்களுடன் பிறக்கும் வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

## புதிய பறவைக் காய்ச்சல் வைரஸ் – தாக்குதலில் மூன்று சீனர் பலி

முன்னர் எப்போதுமே மனித இனத்தைத் தாக்கியிராத புதிய பறவைக் காய்ச்சல் வைரஸ் ஒன்று சீனாவில் பரவி வருகின்றது. எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் வைரஸ்ஸின் தாக்கத்தால் மூவர் உயிரிழந்துள்ளனர். தற்போதுவரை ஒன்பது சீனர்கள் இந் நோய்க்குட்பட்டுள்ளதாகச் சீனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் வைரஸ் எவ்வாறு மனிதருக்குத் தொற்றுகின்றது என்பது சீன மருத்துவத் துறைக்குச் சவாலாகவே அமைந்துள்ளது. ஏனெனில் இவ் வைரஸ் தொற்றுக்குள்ளாகி உள்ளவர்களுடன் நெருங்கிப் பழகும் எவருக்கும் இவ்வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது வரை எந்த நோய்க்காப்பு மருந்துகளும் இவ்வைரஸ் தொற்றுக்கு எதிராகக் கண்டு பிடிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது சீனா தற்போது தாம் இவ்வைரஸ் நோய்க்கான மருந்தில் இறங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 09

பிரதீபா

1. பின்வருவனவற்றில் அதிகளவு விற்றமின் C உள்ள பழம் எது?
   1. அப்பிள் 2. விளாம்பழம் 3. நெல்லி
2. எண்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழாவின் பெயர் என்ன?
   1. பொன் விழா 2. அமுத விழா 3. பவள விழா
3. மானின் ஆண் கலை என்பது போல குதிரையின் பெண் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. வடவை 2. குண்டு 3. பிணை
4. பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப்பெயர்?
   1. உறங்கினான் 2. பிக்குணி 3. அதிபர்
5. கொள்ளை நோய்க்கிருமியை பரப்பும் பிராணி எது?
   1. எலி 2. குரங்கு 3. ஈ
6. பொருத்துக்களைத் தைப்பதற்கு உதவும் தையல் முறை எது?
   1. பெருநூலோடி 2. மீன் முள்ளுத்தையல் 3. சிறு நூலோடி
7. மஞ்சள், நீலம் எனும் இரு மூலவர்ணங்களை சேர்ப்பதால் பெறப்படும் வர்ணம் எது? 1. பச்சை 2. ஊதா 3. கபிலம்
8. பின்வரும் விளையாட்டுக்களில் குழுவாக சேர்ந்து ஓடும் ஓட்டம் எது?
   1. மரதன் ஓட்டம் 2. அஞ்சல் ஓட்டம் 3. 400மீ ஓட்டம்
9. இரவு நேரத்தில் மலரும் பூக்களின் வாசனை அதிகமாக இருக்கக் காரணம் என்ன?
   1.காற்று வீசுவதனால் 2. வண்டுகளைக் கவர
   3. நிலவொளி அதிகமாக இருப்பதனால்
10. உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவுத் தொகுதி?
    1. சோறு, கிழங்கு 2. அவரை, வல்லாரை 3. பால், அவரை
11. போமலின் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளில் ஒன்று?
    1. உடல் கடித்துத் தடித்தல் 2. உதடு வீங்குதல்
    3. வாந்தி ஏற்படல்
12. பிராணிகளால் தாவரங்களுக்கு கிடைக்கும் நன்மையல்லாதது?
    1. வித்துக்களைப் பரம்பல் அடையச் செய்தல்
    2. மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்
    3. பூ, இலை, காய் என்பவற்றை அரித்துச் சேதமாக்குதல்.
13. எம் மன்னனின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு பௌத்த மதம் கொண்டுவரப்பட்டது?
    1. தேவநம்பியதீசன் 2. தாதுசேனன் 3. மகிந்த தேரர்
14. விளையாட்டுக்கள் மூலம் நாம் விருத்தி செய்து கொள்ளக் கூடிய நல்ல பண்புகளில் ஒன்று பின்வருவனவற்றில் எது?
    1. எதிர்க்கும் குணம் 2. போட்டி மனப்பாங்கு 3. சகிப்புத்தன்மை
15. கவிதா 30 நிமிடங்களில் 15கி கொழுந்து கொய்வாள். விமலா 15 நிமிடங்களில் 8கி கொழுந்து கொய்வாள். இருவரும் 2 மணித்தியாலங்களில் எவ்வளவு கொழுந்து கொய்வார்கள்?
    1. 124கி 2. 92கி 3. 142கி
16. 2லீ 350மி.லீ பழச்சாறுடன் 4,600மி.லீ தண்ணீர் கலந்து 300மி.லீ போத்தல்களில் அடைக்கப்பட்டால், அடைக்கப்பட்ட போத்தல்களின் எண்ணிக்கை?
    1. 23 2. 23.17 3. 24
17. கமலா 7 பாடங்களில் பெற்ற சராசரி புள்ளி 60 ஆகும். அவள் 8 பாடங்களில் பெற்ற சராசரி புள்ளி 63 ஆகும். எனின், அவள் 8வது பாடத்தில் பெற்ற புள்ளி யாது? 1. 74 2. 84 3. 3
18. கந்தன் மு.ப 11.20க்கு வீட்டிலிருந்து புறப்பட்டு புகையிரத நிலையத்தை அடைய 20 நிமிடங்கள் எடுத்தார். புகையிரதம் வரும் வரை 5 நிமிடங்கள் காத்திருந்தார். புகையிரதம் பயணத்தைத் தொடங்கி 6 மணி 30 நிமிடங்களில் பதுளையை அடைந்தது. கந்தன் பதுளையை அடைந்த நேரத்தை, நியம கடிகாரத்தில் தருக.
    1. 19:15 2. 18:15 3. 06:15
19. வான் ஒன்றில் 25 ஆசனங்கள் உள்ளன. அதன் மும்மடங்கிலும் 10 கூடுதலாக பஸ் வண்டியில் இருக்கின்றன. வானில் உள்ள ஆசனங்களை விட பஸ்ஸில் எத்தனை ஆசனங்கள் கூடுதலாக உள்ளன?
    1. 50 2. 60 3. 45
20. சித்ராவிடம் 20 ரூபாய் காசுத் தாள்கள் 3உம் 10 ரூபாய் காசுத் தாள்கள் 4 உம், 5 ரூபாய் நாணயங்கள் 6உம் உள்ளன. அவளிடம் இன்னும் 2 ரூபாய் நாணயங்கள் 10 இருப்பின் ஒரே சம விலையுள்ள 3 சாக்லெட்டுக்கள் வாங்கலாம். எனின் ஒரு சாக்லெட்டின் விலை யாது?
    1. ரூபா 150 2. ரூபா 50 3. ரூபா 40
21. பதிவுத் தபாலில் அனுப்ப ரூபா 32.75 க்கு முத்திரை ஒட்டப்பட வேண்டியிருந்தது. இதற்கென ரூபா 50 தைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?
    1. ரூபா 17.25 2. ரூபா 17.05 3. ரூபா 18

பெயர்: ..........................................................

முகவரி: ..........................................................

..........................................................

பாடசாலை: ..........................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 ..... வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள் வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானிழைத்தலும் தானே வீழ்தலும்

மாயன்

உடைத்தல், உடைதல் தொடர்பான பரந்த அறிவும் அனுபவமும் கொண்ட உலக இனங்களுள் ஒன்றாக இருப்பது தமிழினம்.

உடைத்தல் அல்லது உடைதல் தொடர்பான எத்தனையோ தீர்கமற்ற அனுகுமுறைகளை விடுத்து உடைத்து அல்லது உடைந்து பெருகுதல் என்பது எப்போதுமே புதியவை நிகழ்தலுக்கான வாய்ப்புக்களையும் கொண்டமைந்து விடுவது என்னவோ உண்மைதான். உடைத்தல் அல்லது உடைதல் என்பது ஒரு அழிவுதான். இவ்வாறு நிகழும் போது எம் கண்முன்னே இருந்த அது இல்லாமற் போய்விடுகின்றது. சிலவேளைகளிற் காலங்காலமாக பார்த்துப் பார்த்துச் செதுக்கிய விடயங்கள் உடைந்தபோது அதைத் தாங்கமுடியாமற் தற்கொலை செய்துகொண்டோர் ஆயிரக்கணக் கானவர்கள்.

இப்படித்தானே செந்நீர் விட்டு வளர்த்த விடயங்கள் சில கண் முன்னே உடைத்தழிந்து போனபோது அவற்றின் மறுபிறப்பின்மையால் மனிதர்கள் கலங்கித் தவித்தனர்.

ஒரு உடைதலின் பின் அற்புதமான உருவாக்கங்களை இயற்கை எமக்காகப் படைத்திருக்-கின்றது. ஆனால் ஒரு உடைத்தலின் பின் உருவாக்குதல் என்பது உடைப்பவரின் தீர்க்க தரிசனத்திலும், நிபுணத்துவத்திலும் அவரின் பின் அணிதிரள்பவர்களின் அறிவுசார் எண்ணங்களிலும்தான் தங்கிக் கிடக்கின்றது.

சாதாரணமான உதாரணம் ஒன்றைச் சிந்திப்போமே! குழந்தையொன்றின் ஜனனம் நிகழும்போது பனிக்குடம் இயற்கையாய் உடையக் குழந்தை உலகில் ஜனனிக்கின்றது. ஆனால் இயற்கை மறுக்கும்போது மேற்கொள்ளும் செயற்கைச் சத்திரசிகிச்சையின் போது உடைத்தெடுக்கும் குழந்தை முழுவதாய் பிறப்பதென்பது மகப்பேற்று வைத்திய நிபுணரின் கையில் அல்லவா தங்கிக் கிடக்கின்றது.

இப்போது ஏன் நாம் உடைதலைப் பற்றியும் உடைத்தலைப் பற்றியும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது?

கடந்த ஐம்பதாண்டுகால வாழ்வில் பல்வேறு உடைதல்களையும் உடைப்புக்களையும் தாண்டி வந்த இனம் நாம். தலைவர்கள் உடைந்த போதெல்லாம் தொண்டர்களான நாம் எமது ஒளிமயமான எதிர்காலத்திற்காய் எனச் சொல்லி உடைத்துப் பிரிக்கப்பட்டோம். எனினும் அப்போதெல்லாம் வாழ்வோம் என்ற கடும்போக்கும் உறுதியும் எமக்கிடையே வேறூன்றிக் கிடந்தது.

பின் சிறிது காலத்தில் ஆயுதம் தாங்கிய எம்மவர்கள் தம்மிடையே ஏற்பட்ட பிணக்குகளுக்காய் விடுதலைக்கான ஆயுதத்தை பயன்படுத்தி சகோதரப் படுகொலை-களை நிகழ்த்தி இனத்தை உடைத்துப் பிரித்த போது உயிர்வலி கசியப் பிரிந்து போனவர்கள் நாங்கள். அந்த உடைத்தழிப்பே இன்றுவரை மீளா உயிர்வலியைத் தந்து போயிருக்கின்றது.

அதன் பின் உடைத்தழிப்புக்கள் எவையுமே எம் இனத்தை மீட்கமுடியாமல்தான் போயுள்ளது. ஏன் இந்த உடைத்தழிப்புக்களால் எமது இனத்தைக் காக்க முடியாமற் போய் விட்டது என்பதை ஆராய முற்பட வேண்டும்.

உடைத்தழிக்கும் போது அவ்வாறு உடைத்தழிப்பவர்களின் நோக்கங்களாக ஒன்றில் இருந்ததை உடைத்தழித்துவிட்டு புதிதொன்றை உருவாக்குவதாகவோ அல்லது இருந்ததை உடைத்தழித்து அதன் தடத்தையே இல்லாமற் செய்து விடுவதாகவோ தான் இருக்கும்.

இருந்ததை உடைத்தழித்து அதன் தடத்தையே இல்லாமற் செய்வதென்பது உலகில் எப்போதுமே சாத்தியப்பட்டதில்லை. அமெரிக்காவால் அல்குவைதாவை அழிக்கமுடியும். ஆனால் வேறோடு பிடுங்கி எறிதல் முடியாது. என்றாவது ஒரு நாள் அவ் அமைப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அது தான் இயற்கையின் நியதி.

உடைத்தழித்துவிட்டுப் புதியதொன்றை உருவாக்குதல் என்பது உடைத்தழிப்பவரின் கைகளில் தான் தங்கியுள்ளது.

நாம் ஏன் உடைத்தழித்தோம் என்பதன் தெளிவும், அதன் நியாயமும், அதன் பின்னர் நாம் கொண்டுள்ள கொள்கையின் மீதான பற்றுறுதியும், அதனை முன்னெடுத்துச் செல்லும் மனஉறுதியும், உடைத்தழிப்பவரிடம் இருந்தால் மட்டுமே அங்கு உருவாக்கம் சாத்தியமாகும்.

இக்கூற்றுடன் நீங்கள் ஒத்துப்போகாமற் போகலாம். அது உண்மைதான் ஏனெனில் உடைத்தழித்தவர்கள் மீள உருவாக்கித்தான் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் உருவாக்கிய புதிய அமைப்புக்கள் அவர்கள் ஆரம்பத்திற் செயற்பட்ட நோக்கத்துடன் செயற்படுகின்றதா என்பதை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

கடந்தவாரம் பிரதம பத்திரிகைகளிற் பலவும் அவற்றின் இணையத் தளங்களும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பிளவுபடும் என்ற ஆரூடத்தை வெளியிட்டிருந்தன.

அதற்குக் காரணமாய் அமைந்தது அண்மையில் தமிழரிடையே எஞ்சியிருக்கும் மூத்த அரசியல்-வாதிகளில் ஒருவரான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு.வீ. ஆனந்தசங்கரி அவர்கள் காட்டமான தனது அறிக்கையொன்றை வெளியிட்டமை ஆகும்.

அவ் அறிக்கையில் "கூட்டமைப்பாக பதிவு செய்வதில் தமிழரசுக் கட்சிக்கு எண்ணமில்லை. அவர்கள் எம்மீது சவாரி செய்யவே பார்க்கின்றனர். கூட்டமைப்பு உடையாதிருப்பதற்கு எந்த விட்டுக்-கொடுப்புக்கும் தயார் என சம்பந்தர் கூறியிருந்த போதிலும், அவர் இரண்டு வருடங்களாக இதனையே தெரிவித்து வருகின்றார்'' என்று அவர் தெரிவித்திருந்தார்.

இவ் அறிக்கையினைத் தொடர்ந்தே கூட்டமைப்பின் உடைவு பற்றிய ஆரூடங்கள் வெளியிடப் பட்டிருந்தன.

கூட்டமைப்பென்பது இரண்டு அரசியற் கட்சிகளினதும், மூன்று முன்னாள் தமிழர் ஆயுதப் போராட்டக் குழுக்களின் அரசியல் அமைப்புக்களினதும் கூட்டாகும். இக்கூட்டானது தம்மிடையே பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் இயங்கும், தமிழரின் அழிக்கப்பட்ட தலைமைத்துவத்தால் உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும்.

தற்போதுவரை பரஸ்பரப் புரிந்துணர்வின் அடிப்படையில் இயங்கும் இவ் அமைப்பினைச் சட்ட ரீதியான கட்சியாகப் பதிவதில் கடும் இழுபறி நிலையே காணப்படுகின்றது. இந்த இழுபறியினால் தான் இக்கூட்டமைப்பு எக்கணத்திலும் உடைத்தழிக்கப்பட அல்லது உடைந்தழிந்து போய்விடும் போன்ற போக்கைக் காட்டி நிற்கின்றது.

கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்யும் போது அக் கட்சியின் பதவிகளை இப்போதுள்ள ஐந்து அமைப்புக்களிடமும் பகிரவேண்டிய தேவை எழுகின்றது. அங்குதான் இக் கூட்டமைப்பில் பிரதான பாத்திர மேற்றிருக்கும் தமிழரசுக் கட்சி பிரச்சனைகளை எதிர்கொள்ளும். ஏனெனில் பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி சபைகள் பலவற்றின் அங்கத்துவத்தை கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களே வென்று வைத்திருக்கின்றனர். எனவே தனிக்கட்சியாகப் பதியமுனையும்போது இப்போதுள்ள இழுபறி நிலைகளை விட பெரும் இக்கட்டை கூட்டமைப்பு சந்திக்கும்.

சரி, கூட்டமைப்பு உடைந்து பிரிந்தால் நடப்பது என்ன? என்பதே எம்முன்னுள்ள கேள்வி.

இப்போதுள்ள நிலையில் கூட்டமைப்பு பிரியுமானால் மீள இரத்தம் சிந்தாத முள்ளிவாய்க்கால் அவலத்தைத் தமிழர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதே உண்மை.

உலகளாவிய ரீதியில் தமிழரின் தலைவர்கள் என்பவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்பதே உண்மை. இக் கணத்தில் மூத்த அரசியல்வாதியான ஆனந்தசங்கரி அவர்களின் சாணக்கியமற்ற எடுகோள் ஒன்றைக் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். அண்மைய அவரது அறிக்கையில் "த.தே.கூ தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல. ஏனெனில் கூட்டமைப்பினர் வட மாகாணத்தில் 63 ஆயிரம் வாக்குகள் பெற்றபோது சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து 13 ஆயிரம் வாக்குகளை பெற்றுள்ளார். அவ்வாறு இருக்கையில் த.தே.கூ.வினர் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளா?" என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். இரண்டு வெவ்வேறான தேர்தல்களான பொதுத்தேர்தலையும் சனாதிபதித் தேர்தலையும் ஒப்பிட முடியாது என்பதை அவர் இக் கூற்றின் போது கருத்திற்கொள்ளவில்லை.

எனவே கூட்டமைப்பின் உடைவிலிருந்து புதிய உருவாக்கம் ஒன்றிற்கான காலம் இப்போதல்ல என்பதையே அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பொருத்தமான காலத்தில் அவ் அமைப்பு இயற்கையாக உடைந்து புதிய வழிசெல்லும் புத்தாக்கம் பெற்ற அமைப்பாக மாறலாம். அதுவரை தலைவர்கள் அதனை உடைத்து புதியதை உருவாக்க இயற்கையோ மக்களோ இடமளிக்கப்போவதில்லை என்பதே உண்மை.

## சதுரங்கம்

வ.ஐ.ச. ஜெயபாலன்

சிருஸ்பட்டி வேட்கையில்
ஆனைமலைக்காடுகள்பாடுகிற
அந்திமாலை.
அங்கு உயிர்க்கிற மந்திரக்கம்பளத்தில்
உன்னையே சுற்றுதடி மனசு.

இது தீராத காதலடி
நீதான் கண்டு கொள்ளவில்லை.
அதோ புல்லின்கீழ் கட்டெறும்பாய்
தொலை கீழ் மூங்கிற் காடுகளுள் ஊரும்
யானைபோல
உண்மையில் என் காதலும் பெரியதடி.

காமத்தில் சூரியன்
பொன்சிந்த இறங்கி வர.
நாணிப் புவிமகள்
முந்தானையாக முகிலை இழுக்கின்றாள்..
ஆகா அப்பன் குதிருக்குள் இல்லை என்கின்ற
உனது நாடகம் அல்லவா இது.

ஆண் பெண்ணுக்கிடையில்
ஒரு கண்ணுக்குத் தெரியாத சதுரங்கப் பலகை
எப்போதும் விரிகிறது.

என்னோடு இன்னும் சிலரை பந்துகளாய் எறிந்து
ஏந்தி ஆடும் வித்தைக்காரியில்தான்
காதலானேன்.
அதனால் என்ன.
கிழே காட்டில்.

ஒரு மூங்கில் புதரை மட்டுமே மேய்ந்த யானையும்
இல்லை ஒரு யானை மட்டுமே மேய்ந்த மூங்கில்
புதரும் இல்லை.
. எதுவும் செய்.. ஆனால் இறுதியில் நாம் மட்டுமே
மிஞ்சவேண்டும். நம் மரபணுக்களில் கவிதை
சேர்க்க.

## நெய்தல் பாடல்

வாழிய தோழி
கடலின்மேல் அடிவானில்
கரும்புள்ளியாய் எழுதப்படும்
புயற் சின்னம்போல
உன் முகத்தில் பொற்கோலமாய்
தாய்மை எழுதப்பட்டு விட்டது.

உனக்கு நான் இருக்கிறேனடி.
இனியும் உன் ஆம்பல் கேணிக் கண்களை
உப்புக்கடலாக்காதே.
புராதன பட்டினங்களையே மூடிய
மணல் மேடுதான் ஆனாலும்
தேர்ந்த கள்ளியான ஆமையால்கூட
இங்கு தன் முட்டைகளை
நெடுநாள் மறைக்க முடியாதடி.

விரைவில் எல்லாம்
அறியப்படாதிருந்த திமிங்கிலம்
கரை ஒதுங்கிய நாள் போலாகிவிடும்
அதனால் என்னடி
இது நம் முதுகரைக்குப் புதிசல்லவே.

அஞ்சாதே தோழி
முன்பு நாம் நொந்தழ
மணல் வீடுகளை ச் சிதைத்த பயல்தான்.
ஆனாலும் காதல் அவனை
உன் காலில் விழ வைத்ததல்லவா.
ஆளரவமுள்ள சவுக்குத்தோப்புக்குள்
முதல் முயக்கத்தின்போதுகூட அவனிடம்
குஞ்சுக்கு மீன் ஊட்டும் தாய்ப் பறவையின்
கரிசனை இருந்ததல்லவா.

ஆறலைக்கள்வர்போல
சிங்களர் திரியும் கடற்பாலைதான் எனினும்
நீர்ப் பறவைகள் எங்கே போவது.

இனிச் சோழர்காலம் திரும்பாது என்பதுபோல
அவன் நகரக்கூலி ஆகான் என்பதும்
உண்மைதான் தோழி.
ஆனாலும் அஞ்சாதே
அவன் நீருக்குள் நெருப்பையே
எடுத்துச் செல்லவல்ல பரதவன்.

அதோ மணல் வெளியில்
முள்ளம்பன்றிகளாய் உருளும்
இராவணன்மீசையை
சிங்களக்கடற்படையென்று
மீனவச்சிறுவர்கள் துரத்துகிறார்கள்.

இனிக்கரை மாறும் கடல் மாறும்
காலங்களும் மாறுமடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷன் பெய்ம் அமைப்பு அரசிடம் மீண்டும் வேண்டுகோள்..

பல்லாண்டு கால உள்நாட்டு யுத்தத்தின் போது மூதூரில் வைத்துக் கொல்லப்பட்ட தமது நிறுவனத்தின் பதினேழு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரதும் கொலை தொடர்பாகப் பூரண விசாரணைகளை நடாத்தி அப் பதினேழு பேரினதும் கொலைகளுக்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என இலங்கை அரசிடம் பிரான்ஸை த் தளமாகக் கொண்டியங்கும் அக்ஷன் பெய்ம் தொண்டு நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

2006ம் ஆண்டில் மூதூரில் தமது அலுவலக முன்றலில் படுக்கவிடப்பட்டு மிக அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட இத் தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்களின் கொலையானது உலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருந்தது.
இக்கொலைகளைப் புரிந்தவர்கள் அதற்குப் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும் என அக்ஷன் பெய்ம் தொண்டு நிறுவன மனித விவகாரங்களுக்கான பேச்சாளர் போலின் செக்கூட்டி தெரிவித்துள்ளார்.

"மூதூர்ப் படுகொலைகள்" என உலக வரலாற்றில் பதிவான இக் கொலைகள் ஆகஸ்ட் 04, 2006ல் நடந்தேறியது. அக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் மூதூர் நகரானது மூன்று நாட்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கப்பட்ட பின் இராணுவம் அந் நகரை மீட்டபோதே பதினாறு தமிழர்களும் ஒரு முஸ்லிம் ஊழியருமாக மொத்தம் பதினேழு பேரின் சடலங்கள் அக்ஷன் பெய்ம் தொண்டு நிறுவன அலுவலக முன்றலில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

15 பேரின் சடலங்கள் நிலத்தில் குப்புறப் படுத்திருந்த நிலையிலும் இருவரின் சடலங்கள் வாகனம் ஒன்றுக்கு அருகிலும் கண்டெடுக்கப் பட்டிருந்தன.
அண்மையில் ஜெனீவா மனிதவுரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அக்ஷன் பெய்ம் நிறுவனம் வரவேற்றுள்ளது. எனினும் அத்தீர்மானம் கொல்லப்பட்ட பணியாளர்களின் கொலை தொடர்பாக சுதந்திர விசாரணை எதனையும் கோரவில்லை, அதற்குப் பதிலாக இலங்கையை இக் கொலைகள் தொடர்பாக விசாரிக்குமாறு கோரியுள்ளது எனவும் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார். "சர்வதேச சமூகம் ஐநாவில் பிரேரணையை நிறைவேற்று-வதற்காக ஒன்றுபட்டு நின்றது சிறப்பானதே. ஆனால் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் சரத்துக்கள் போதுமானதல்ல. அச்சரத்துக்கள் உறுதியற்றவையாகக் காணப்படுவதடன் இலங்கையின் மீது எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்க வில்லை" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாம் வேண்டுவது என்னவெனில் நியாயமான சர்வதேச விசாரணையையே. இவ்விசாரணையை இலங்கை அரசைச் செய்யுமாறு கோருவது வஞ்சகப்புகழ்ச்சியானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மூதூர்ப் படுகொலைகள் தொடர்பாக இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட மூன்று சட்ட விசாரணை முன்னெடுப்புக்களைத் தாம் மிகக் கவனமாய் அவதானித்து வந்ததாகவும் அவை சுமார் இரண்டு வருடங்கள் நீடித்த போதிலும் காலம் தாழ்த்துதல், தவறுகள் மற்றும் அரசியல் மூக்குநுழைப்புக்களால் அவ் விசாரணைகள் வலுவற்றுப் போயிருந்தன என அக்ஷன் பெய்ம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

2008ம் ஆண்டில் மனிதவுரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற உள்நாட்டு மனிதவுரிமை அமைப்பானது இக்கொலைகளின் பின்னால் அரச படைகள் இருப்பதாகவும் அதனை மூடிமறைக்க அரசு முயலுவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்-தக்கது. இதனை அரசு கடுமையாக மறுத்ததுடன் இக் கொலைகளுக்குப் பொறுப்பு விடுதலைப் புலிகளே என தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆட்சியை இழக்க நேரிடும்..

கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ். ஸுபைர் கூறியுள்ளார்.

ஏறாவூர் அல் முனீரா பாலிகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்ட கருத்தை தெரிவித்துள்ளாளார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்..

நாட்டில் தற்போது முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக தொடர்ச்சியானதும் நன்கு திட்டமிட்டதுமான அடக்கு முறைகளும் தாக்குதல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் முஸ்லிம் சமூகம் அரசியல்வாதிகளாகிய எம்மீது கடும் அதிருப்தி கொண்டுள்ளது. நாம் தொடர்ந்தும் அமைதி காக்க முடியாது. மக்கள் எங்களை நோக்கி கைகளை நீட்டக்கூடிய நிலை ஏற்படப்போகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். கிழக்கு மாகாண சபையில் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த 22 முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கின்றோம். கட்சி வேறுபாடுகளை மறந்து நாம் ஒரே நோக்கில் சிந்தித்தால் பல்வேறு எதிர்பாராத திருப்பங்களை எதிர்காலத்தில் ஏற்படுத்த முடியும். இதேவேளை கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்களின் நலனை அடிப்படையாக கொண்டு நல்ல தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

## ஆளுனருக்கு பாராட்டு..

வித்தியாலயத்தில் நடைபெற்றது. வித்தியாலய பிரதி அதிபர் எம்.அச்சி முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கல்லூரி பிரதி அதிபர் எம்.அச்சி முகம்மட், நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எல்.எம்.சலீம், பிரதேசசபைத் தலைவர் எம்.ஏ.எம். தாஹீர், பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் வை.எல்.சுலைமாலெவ்வை போன்றோர்களால் ஆளுனர் றியர் அட்மிறல் மொஹான் விஜயவிக்கிரம பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் உள்ளுர் அரசியல் தலைவர்கள், ஊர்ப் பெரியவர்கள், கல்விமான்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# அரச சேவைக்கான கிழக்கு மாகாண விதிக்கோவை..

எனக் குறிப்பிட்டவர் ஏற்கனவே சப்பிரகமுவ, மேல்மாகாணங்களில் இவ்வகையான கையேடு வெளியிட்டி-ருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

"இதற்கு முன் இந்த நீதி நிர்வாக நடைமுறைகள் அதிகாரி-களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் தெரியாத காரணத்தினால் பல்வேறு சிக்கல்களை மாகாணத்தில் அனுபவித்து இருக்கிறோம். ஆசிரிய நியமனம் ஏனைய நியமனங்கள், பதவியுயர்வுகள், விசாரனைகள் சம்மந்தமாக பல்வேறு பிரச்சினைகள் அனுபவிக்க வேண்டியிருந்தது" என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார்.
"நடைமுறைகளிலும் இது சிறந்தாக செயற்படுகின்றது. 7 வருடங்களுக்கு மேல் கிழக்கு மாகாணத்தில் ஆளுநராக கடைமையாற்றிய நான் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளேன். 13ஆவது திருத்தச் சட்டம் பல முறைப்பாடு கொண்டதெனக் கூறப்பட்டபோதும் அதன் அடிப்-படையில் செயற்பட்டு வருகின்றது என்பதே உண்மை. சில சந்தர்ப்பங்களில் அதிகாரிகளை நியமிக்கும் போது, பதவி



உயர்வு வழங்கும் போது பல சட்டப் பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. இவை இனிமேல் இக்கையேட்டு வழக்கத்தின் மூலம் தீர்த்து வைக்கப்படும்.

மாகாணத்துக்கு தேவையான ஆசிரியர் நியமனம், அதிபர் நியமனம் ஏனைய உத்தியோகத்தர் நியமனங்களை இந்த மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் மூவினத்தையம் கருத்தில் கொண்டு வந்திருக்கின்றேன் என்றார்.

இந்நிகழ்வில், ஆளுநரின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், பிரதம செயலாளர் சரத் அபயகுணவர்த்தன மற்றும் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
கிழக்கு மாகாண அமைச்சர் ஜைகா இணைப்பாளருடன் கலந்துரையாடல்..

கிழக்கு மாகாணத்தில் வறுமைக் கோட்டில் கீழ் மூவின மக்கள் வாழும் கிராமங்களை இனங்கண்டு அக்கிராமங்களை ஜைகா திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை நாட்டிற்கான ஜைகா இணைப்பாளருடன் கலந்துரையாடல் ஒன்றை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமான் லெப்பை மேற்கொண்டிருந்தார். கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் 03.04.2013ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வின் போது. அம்பாறை மாவட்டத்தின் நான்கு கிராமங்களும் மட்டக்களப்பில் மூன்று கிராமங்களும் திருகோணமலையில் மூன்று கிராமங்களுமாக பத்து கிராமங்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

## சக்கரங்கள் திருட்டு..

கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தேவாநகர், செல்வநாயகபுரம், உதயபுரி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என்பது தெரிய-வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஏப்ரல் 12ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## றிஸானாவின் குடும்பத்திற்கு நிதியுதவி..

இறுவெட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி றிஸானாவின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி ஜம்யத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி எஸ்.எம். அலியார் பலாஹி றிஸானாவின் தந்தை நபீக்கிடம் குறித்த பணத்தொகையையும் ஐம்பது நூல்களையும் கையளித்துள்ளார்.

## சம்பூர் சூடைக்குடாவை..

சூடைக்குடா பகுதியை படையினரின் உதவியோடு பார்வையிட்டுள்ளனர்.

ஏழு வருடங்ளின் பின்னர் இம்மக்கள் தமது சொந்த இடத்தை பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம் மக்களை அழைத்துச் சென்ற குழுவில் கிழக்கு மாகாண அபிவிருத்தி இணைப்பதிகாரி மேஜர் பேர்ட்டி பெரேரா, மூதூர் பிரிகேட் கொமாண்டர், சம்பூர் கடற்படை பொறுப்பதிகாரி டி.ஏ.எல். குணரட்ண, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பியந்த பத்திரன மற்றும் கிளிவெட்டி நலன்புரி நிலைய பொறுப்பாளர்களான சிவப்பிரகாசம், மங்கேளஸ்வரி, விமலாதேவி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## தமிழ்மொழித் தின விழா..

தி/கிண்ணியா இஹ்ஷானியா மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.
இந்நிகழ்வின் தலைமையை கிண்ணியா வலயக்கல்வி அலுவலக தமிழ் மொழிப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. ரகுமத்துல்லா ஏற்றிருந்தார். கிண்ணியா கோட்டக்கல்விப் பணிப்பாளர் அஹமது, இஹ்ஷானியா மகளிர் வித்தியாலய அதிபர் எஸ்.ஏ.எம். பாறூக் மற்றும் வளவாளர்களும் ஆசிரிய ஆலோசகர்-களும் கலந்துகொண்டிருந்தனர்.

## மகளிர் தின நிகழ்வு..

நிகழ்வின் தலைமையை கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் ஆரியவதி கலப்பதி ஏற்றிருந்தார். நிகழ்வில் மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண ஆளுனர், கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றம் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். - கீத்

## விளையாட்டு உபகரணங்கள் தீயில்..

இத் தீ விபத்தில் சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்ள் மற்றும் பாடநூல்களும் சாம்பலாகி உள்ளதாக தெரிகின்றது. இது தொடர்பில் கிண்ணியாப் பொலீசார் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எரிந்துபோன விளையாட்டு உபகரணங்கள் கடந்த வருடம் இலங்கை அணியின் மட்டைப்பந்து வீரர் மஹேல ஜெயவர்த்தனவால் அன்பளிப்புச் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சூரிய நடுக்கம்

பூமியின் மேலோட்டுக்குக் கீழே உருகிய குழம்புநிலையில் உள்ள நிலம் எந்நேரமும் புயலாக சுழன்று கொண்டிருப்பதால் அதன் தாக்கம் மேலே நில நடுக்கமாக வெளிப்படுகிறது. கிட்டத்தட்ட இதே போல சூரியனின் உள்ளும் நிகழ்கிறது. இதன் பாதிப்பு சூரிய மேற்பரப்பில் சீற்றத்துடன் பாய்ந்து வீசும் பிழம்பு (Solar Flares) களாக வெளிப்படுகிறது.

பூமியின் நிலநடுக்கம் போலவே சூரியனின் மேற்புறத்திலும் அதிர்வுகள் ஏற்படுகின்றன. "5 நிமிட அதிர்வு" என்று அழைக்கப்படும் (5 minute oscillation) அதிர்வில் 3 மில்லி ஹெர்ட்ஸ் அதிர்வு ஏற்படும். இது கோயில் கண்டாமணி அடித்து ஓய்ந்தும் தொடர்ந்து கேட்கும் ரீங்காரம் போன்றிருக்கும்.

சோலார் அண்ட் ஹீலியோஸ்பியர் (Solar and Helioshpere Observatory SOHO) ஆப்சர்வேட்டரி என்ற NASA-ESA ஆய்வுக்கூடம் இந்த அதிர்வுகளைக் கவனித்துக் கொண்டு வருகிறது. அதிர்வுகள் சூரியனில் எப்படி வெளிப்படுகிறது என்பதை அறிவதால் அதன் செயல்பாடுகளை அறிய முடியும் என்பது உள்ளக்கிடக்கை.

## கடலும் பரப்பளவும்

| கடல் | பரப்பு ச.கி.மீ |
|---|---|
| பசிபிக் | 16,62,41,000 |
| அட்லாண்டிக் | 8,65,57,000 |
| இந்தியன் | 7,34,27,000 |
| ஆர்டிக் | 94,85,000 |
| தென் சீனக்கடல் | 29,74,600 |
| கரீபியன் கடல் | 25,15,900 |
| மெடிட்டரேனியன் கடல் | 25,10,000 |
| பெர்ரிங் கடல் | 22,61,000 |
| மெக்ஸிகோ வளைகுடா | 15,07,600 |
| ஒக்கோத்ஸ்க் கடல் | 13,92,100 |
| ஜப்பான் கடல் | 10,12,900 |
| ஹட்சன் விரிகுடா | 7,30,100 |
| கிழக்கு சீனக் கடல் | 6,64,600 |
| அந்தமான் கடல் | 5,64,900 |
| கருங்கடல் | 5,07,900 |
| செங்கடல் | 4,53,000 |

## விட்டுக்கொடுத்தல்

ஓர் பெரிய நீரோடை ஒன்றைக் கடந்து செல்வதற்கு வசதியாக ஓர் மரக்குற்றி குறுக்காக பாதை போல் போடப்பட்டிருந்தது. அந்நீரோடையைக் கடப்பதற்கு அம் மரக்குற்றி வழி மாத்திரமே காணப்பட்டது. அந்நீரோடையானது எந்நேரமும் வற்றாத நீர் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் ஓடையாகக் காணப்பட்டது. அத்துடன் மிகவும் ஆழமாகவும் காணப்பட்டது. ஒரு நாள் எதிர் எதிர் திசையில் அவ் ஓடையைக் கடப்பதற்காக இரண்டு ஆடுகள் அம் மரக்குற்றியின் இரு அந்தங்களிலும் ஒரே சமயத்தில் ஏறின. ஓர் ஆடு மற்றைய ஆட்டைப் பார்த்து கூறியது "நீ பின்னால் சென்று எனக்கு வழி விட்டால் நான் மற்றைய பக்கம் சென்றுவிடுவேன்" என்றது. மற்றைய ஆடும் அதே போல் உரைத்தது. "நீ செல் நான் போக மாட்டேன்" என இருவரும் மாறி மாறி வாய்த்தர்க்கம் செய்து கொண்டிருந்த வேளையில் இருவருக்கும் கோபம் மிகக் கடுமையாகியது. இரண்டு ஆடுகளும் ஒருவரை ஒருவர் தாக்குவதற்கு தயாராகி தலையை முட்டி மோதி சண்டை பிடித்தன. இறுதியில் இருவருமே ஒருவரையொருவர் வெல்லவும் முடியாமல் ஓர் சமநிலையில் நிற்கவும் முடியாமல் தடாலென நீருக்குள் வீழ்ந்து நீரோடையின் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்டன. அதே போல இன்னுமொரு நாளும் அந்நீரோடையைக் கடப்பதற்காக ஒரே நேரத்தில் இரு அந்தங்களிலும் இரு ஆடுகள் ஏறின. அப்பொழுதும் அவர்கள் ஒருவரையொருவர் மாறி மாறி இறங்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டன. இருந்தாலும் பயனில்லை யாரேனும் ஒருவர் விட்டுக்கொடுக்க தயாராக இருக்கவில்லை. ஆகட்டும் நாமிருவரும் திரும்பிச் சென்றுவிடுவோம் என்று ஓர் ஆடு மற்றைய ஆட்டை நோக்கி கூறிய வேளையில். மற்றைய ஆடு தனது யோசனைப் படி நடந்தால் இருவரும் இதைக் கடந்து தத்தமது வழிகளில் செல்ல முடியும் எனக் கூறியது. மற்றைய ஆடு தானும் சம்மதம் கூறுவது போல தலையை ஆட்டியது. அந்த ஆடு கூறியது, "நான் கீழே படுத்துக் கொள்கின்றேன் நீ என்னைக் கடந்து மெதுவாகச் செல் பின்னர் நான் எழுந்து மற்றைய பக்கம் செல்கின்றேன்" எனக் கூறிற்று. அந்த ஆட்டின் புத்திக் கூர்மையை மிகவும் சந்தோசத்துடன் பாராட்டிய ஆடு, மற்றைய ஆடு கூறியது போல அது படுத்ததும் மெதுவாகக் கடந்து மரக்குற்றியின் மறு அந்தத்தை அடைந்தது. பின்னர் படுத்திருந்த ஆடு மெதுவாக எழும்பி தான் செல்ல வேண்டிய பக்கம் சென்றது. இருவரும் ஒருவருக்கொருவர் நன்றி சொல்லி சென்றன.




## பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறையும் இலங்கை குடும்ப வன்முறைத்தடுப்புச் சட்டத்தின் நோக்கெல்லையும்

இச்சட்டத்தின் நோக்கெல்லையை நோக்குகையில் பிரிவு-2 இன் படி வீட்டுச்சூழலில் துன்புறுத்தப்பட்ட நபர் நீதிவான் நீதிமன்றத்தால் பாதுகாப்புக்கட்டளையை பெறலாம் என்கிறது. முதலில் வீட்டுவன்முறைக்கு எதிராக இடைக்கால உத்தரவு நீதவானால் வழங்கப்படும். பாதுகாப்பு கட்டளை அறுதியாக வழங்கும் வரை இவ் இடைக்கால உத்தரவு அமுலில் இருக்கும். அதாவது பிரதிவாதி ஏதேனும் குடும்ப வன்முறைச்செயல் புரிவதை தடை செய்யும் வகையிலும், துன்புற்றவரின் பாதுகாப்பையும், நலனையும் உறுதிப்படுத்தல் அவசியமான சூழ்நிலையிலும், நீதிமன்றத்தால் 12 மாதத்திற்கு விஞ்ஞாத காலப்பகுதிக்கான பாதுகாப்பு கட்டளை பிரிவு-10 இன் கீழ் உருவாக்கப்படும். அதுமட்டுமின்றி மேலும் அவசியமான சந்தர்பத்தில் குறைநிறைப்புக்-கட்டளைகளையும் ஆக்குவதற்கு நீதிமன்றம் பிரிவு-11 இன் கீழ் சக்தி பெற்றுள்ளது.

மேலும் பிரிவு-16 இன்படி கணவனுக்கெதிராக மனைவியும். மனைவிக்கெதிராக கணவனும் சாட்சியம் கூறலாம் என்கிறது. ஆனாலும் பரஸ்பர வாழ்கையில் கணவன் மனைவிக்-கிடையிலான உறவில் சட்டத்தின் பங்களிப்பு குறித்து கேள்விக்குறி நிலவுகிறது. ஏனெனில் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற போக்கு எம்மிடையில் வேரூன்றிவிட்டது இலங்கை அரசியலமைப்பு 1978 உறுப்புரை-27(12) அரசகொள்கை வழிகாட்டல் தத்துவங்களினூடாக குடும்பத்தை அடிப்படை அலகாக அங்கீகரித்து பாதுகாத்தலும் அரசின் தலையாய கடமையாக காணப்-படுகின்றது. இந்த வகையில் குடும்ப வன்முறைத்தடுப்புச்சட்டம் ஒரு பாதுகாப்பு பொறிமுறையா? அல்லது குலைப்பு பொறிமுறையா? என்பது கேள்விக்கிடமாகவுள்ளது. இதனால் இச்சட்டத்தின் பொருத்தப்பாடு தொடர்பில் ஐயப்பாடு எழுந்துள்ளது.

உதாரணமாக பிரிவு-12(1)ன் கீழ் எவரேனும் ஆளுக்கு ஆதாரமளிப்பதற்கு பிரதிவாதிக்கு கடமை ஒன்று உள்ளவிடத்து அத்தகைய ஆளுக்கு அவசர பண உதவி வழங்குமாறு பிரதிவாதிக் கட்டளையிடப்படலாம். ஆனாலும் பணத்தொகையின் அளவு மேலும் எப்போதுகொடுக்கப்படவேண்டும் என்பன பற்றிதெளிவாக இல்லை. இதனால் பாதுகாப்புகட்டளைபெறும் வரை என்னசெய்வது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அடுத்து இரண்டுதிறத்தவரையும் சேர்த்துவைக்கசட்டம் என்ன செய்கின்றது? எனும் போது பிரிவு-5(2) (அ) திறத்தவர்களுக்கு ஆலோசனை அளிப்பது அவசியமானபோது சமூக ஆலோசகர் ஒருவரிடம் ஆலோசனை பெற நீதிமன்றம் அனுமதியளிக்கும் போதும் அது எத்தகையது என்றும் அதன் விரிவாக்கம் பற்றியும் கூறப்படவில்லை.

ஆகவே சட்டங்களுக்குமத்தியில் சிறு குறைபாடுகள் காணப்படினும் மாற்றங்களுக்குமத்தியில் அவற்றை மதிக்கும் மக்களின் மனநிலையிலேயே சட்டத்தின் வெற்றி காணப்படும் எனலாம். எனவே முடிவாக குடும்பவன்முறை தடுப்புச்சட்டத்தில் பெண்களுக்கெதிராக கிளர்ந்தெழும் உரிமைகள் வங்கப்பட்டாலும் இது முடிவுறா பிரச்சனை-யாகவே காணப்படுகின்றது இந்நிலை முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் இதற்காக பெண்கள் தான் கிளர்ந்தெழ வேண்டும்.

"ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்ற கூற்றிற்கிணங்க. பிரபஞ்சத்தின் அகழ்விளக்கு போன்ற பெண்ணின் கல்வியறிவு, மனோதைரியம் பலப்படுத்தப்பட வேண்டும், பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக மிளிர வேண்டும்.

*ஆக்கம்:*

கீர்த்தனா கோணேஷமூர்த்தி
சட்ட பீடம், யாழ் பல்கலைக்கழகம்

## பலாக்காய்க்கறி (அம்புல் பொலஸ்)

*தேவையானவை:* பிஞ்சுப் பலாக்காய் - 1, தேங்காய் - 1, மஞ்சள் - 1 துண்டு, உள்ளி - 5 பல்லு, இஞ்சி - 1 துண்டு, மிளகு - 1 தே.க, சின்னச்சீரகம் - 1தே.க, தேங்காய்ப்பூ - 2 மே.க, கொறக்காய்ப் புளி - 1 துண்டு, மிளகாய்த்தூள் - 2 மே.க, தேங்காயெண்ணெய் - 3 மே.க, மாசிக்கருவாட்டுத் தூள் - 1 மே.க, மசாலாத் தூள் - 1 மே.க, கடுகு - 1 தே.க, சிறிதாக வெட்டிய வெங்காயம் - 3 மே.க, சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் - 1 மே.க, கறிவேப்பிலை - 1 நெட்டு, ரம்பை - 2 துண்டு

*செய்முறை:* பிஞ்சுப் பலாக்காயை கழுவி, தோல் சீவி ஓரளவு நீளமான நீள்சதுரத் துண்டுகளாக வெட்டி அத்துண்டுகளின் நடுவே சிறுசிறு பிளவுகளாகக் கொத்திப் பாத்திரத்திலிட்டு நீர் விட்டு அவித்து நன்கு அவிந்த பின் நீரை வடித்து ஊற்றிக் கொள்க. தேங்காயைத் துருவி அரை தம்ளர் முதல் பாலைப்பிழிந்து அதனுள் கொறக்காய் புளியிட்டு அரை மணி நேரம் வரை ஊறவைத்த பின் புளியைக் கரைத்துக் கொள்க. பின்னர் மஞ்சள், உள்ளி,. இஞ்சி, மிளகு என்பவற்றிற்கு அளவாக நீர் சேர்த்து பட்டுப்போல் அரைத்தெடுக்கவும். பின் சீரகம், தேங்காய்ப்பூ என்பவற்றையிட்டு ஓரளவாக வாசம் வரும்வரை வறுத்து நீர் சேர்க்காது அரைத்தெடுக்கவும். பின்பு பலாக்காய் பாத்திரத்தினுள் மிளகாய்த்தூள் (மிளகாய்த்தூளிற்குப் பதிலாக மிளகுத்தூள் சேர்த்து பால் கறியும் செய்யலாம்), அரைத்த உள்ளிக்கூட்டு என்பவற்றையிட்டு பாலையும் விட்டு குலுக்கிச் சேர்த்து வைக்கவும். தாச்சியில் எண்ணெயைவிட்டுக் ' கொதித்ததும் கடுகையிட்டு வெடிக்க வைத்து அதனுள் வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றையிட்டு வதங்க விட்டு பின்னர் கறிவேப்பிலை, ரம்பை என்பவற்றைச் சேர்த்து பலாக்காய்க் கலவையைக் கொட்டி, மசாலாத்தூள், வறுத்திடித்த சீரகத் தேங்காய்ப்பூத் தூள், மாசித்தூள் என்பவற்றையிட்டுச் சேர்த்துக் கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்க.

## புழுக்கொடியல் மா

*தேவையானவை:* புழுக்கொடியல் மா - அரைச்சுண்டு, புழுக்கொடியல் குறுணல் - அரை சுண்டு, தேங்காய் - பாதி, சீனி - 200 கிராம், தண்ணீர் - அரை தம்ளர், மாஜரீன் 1 தே.க, ஏலப்பொடி - 1 தே.க, பிளம்ஸ் - 4 மே.க

*செய்முறை:* புழுக்கொடியலைச் சிறு சிறு துண்டுகளாக முறித்தெடுத்து நன்றாக இடித்து தும்பு நீக்கி அரைச் சுண்டு புழுக்கொடியலை வேறாகவும், அரைச் சுண்டு புழுக்கொடியல் மாவை வேறாகவும் எடுத்து வைத்துக்கொள்ளவும். தேங்காயைத் துருவி பொன்னிறமாக வறுத்தெடுத்துக் கொள்க. தாச்சியில் சீனியைப் போட்டு அரைத் தம்ளர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துப் பாகு காய்ச்சவும். பாகு பொங்கிக் கொதிக்கத் தொடங்கியதும் தேங்காய்ப்பூ, புளுக்கொடியல் மா, குறுணல் என்பவற்றையிட்டுச் சேர்த்து மாஜரீனுமிட்டு இடைவிடாது கிளறி கலவை திரளத் தொடங்கியதும் பிளம்ஸ், ஏலப்பொடி என்பன சேர்த்துக் கலந்து தாச்சியை அடுப்பிலிருந்து இறக்கிக் கலவையை வேறோர் பாத்திரத்தில் கொட்டி, சூட்டுடனேயே ஓரளவான தேசிப்பழமளவு உருண்டைகளாகப் பிடித்து உலர வைத்துப் பரிமாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### ஐ.பி.எல் போட்டிகள் : இந்தியாவிலிருந்து பாதுகாப்பைக் கோரும் இலங்கை

ஏப்ரல் 3ந் திகதி ஆரம்பமாகவுள்ள இந்திய பிறீமியர் லீக் போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்து கொள்வதை அனுமதிக்கப் போவதில்லை என அரசு தீர்மானித்துள்ளது என்றும் இந்திய அரசு இலங்கை வீரர்களுக்கு உயிர் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்கும் பட்சத்தில் அவர்கள் அங்கு விளையாடச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் மஹிந்தானந்தா அலுத்கமகே தெரிவித்துள்ளார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கூடாக இந்திய அரசுக்கு இக்கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. என்றும் தெரிவித்தார். எனினும் இதுவரை அதற்கான பதில் எவையும் கிடைக்கவில்லை. இலங்கை வீரர்கள் IPL ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருந்தாலும் அரசு அவர்கள் செல்வதை அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார். முன்னர் இலங்கையின் வீரர்கள் விரும்பினால் அவர்களது சுயவிருப்பத்தின் பெயரில் IPLலில் விளையாடலாம் என இலங்கை அரசு தெரிவித்திருந்தது. இந்தியாவின் சில மாநிலங்களில் வீரர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும் இலங்கை அரசு இந்திய அரசிடமிருந்து அவ்வுறுதியை எதிர்பார்க்கின்றது.

### தமிழ் நாட்டுக்கு பயணம் செய்யாதீர்கள் – பாதுகாப்பு அமைச்சு –

இந்தியத் தமிழ்நாட்டில் இலங்கையர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து தமிழ் நாட்டுக்குச் செல்ல வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சின் அலுவலகர்கள் அறிவித்தலொன்றை விடுத்துள்ளனர். இலங்கைக்கும் சென்னைக்கும் இடையிலான போக்குவரத்து கடந்த வாரங்களில் 30 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என போக்குவரத்துத் துறை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. பாதுகாப்பமைச்சுக்கும் வான் பயண போக்குவரத்து துறையினருக்குமிடையே அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே இவ்விடயங்கள் பேசப்பட்டுள்ளன.

### 43வது பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா இலங்கை சட்டவாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பாராளுமன்ற குற்றப்பிரேரணைகளின் ஊடாக பதவி நீக்கம் செய்யப்பட்ட 43வது பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா அவர்கள் அவ்வாறு பதவிநீக்கப்பட்ட பின் சட்டவாளர் சங்கக் கூட்டத்திற்கு முதன் முறையாக வருகைதந்திருந்தார். 39வது சட்டவாளர் சங்க கூட்டத்தொடரில் இலங்கை சட்டவாளர் சங்கத் தலைவராக உப்புள் ஜெயசூர்ய தெரிவான கூட்டத்தொடரிற்கே அவர் வருகை தந்திருந்தார். இக் கூட்டத்தொடருக்கு அவர் வருகை தந்திருந்த போது "இலங்கையின் 43வது பிரதம நீதியரசர் வருகின்றார்" என்ற அறிமுக வாசகங்களுடன் அவரது பிரதான இருக்கை வரை அழைத்து வரப்பட்டிருந்தார். அவரது கதிரைக்கு முன்னாள் "மேன்மைதகு அம்மணி கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா", என்ற சொற்பதம் தாங்கிய பெயரட்டை வைக்கப்பட்டிருந்தது. சட்டவாளர் சங்கத்தின் கூட்டத்தொடருக்கு பிரதம விருந்தினராக அக்காலத்தில் யார் பிரதம நீதியரசராக இருக்கின்றாரோ அவரே அழைக்கப்படுதல் இதுவரை காலமும் மரபாக இருந்தது. எனினும் இம்முறை 44வது பிரதம நீதியரசராக இருக்கும் மொஹான் பீரிஸ் அவர்கள் இக்கூட்டத்தொடருக்கு அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் அங்கு சமூகமளிக்கவில்லை. ஆனால் அட்டோனி ஜெனரல் பாலித்த பெர்னான்டோ இக்கூட்டத்தொடருக்கு வருகை தந்திருந்தாராயினும் கூட்டம் முடியும் முன்னரே அவர் சென்றிருந்தார்.

### பறவையா – விண்கல்லா விமானத்தை தாக்கியது

மத்தள விமான நிலையத்திலிருந்த புறப்பட்ட ஏர் பஸ் 330 விமானத்தைத் தாக்கி அதன் முன்புறக் கண்ணாடியில் துளையை ஏற்படுத்தியது பறவையா அல்லது விண்கல்லா என்ற ஆய்வில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

## The Sunday Observer:

### உள்நாட்டு பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொறிமுறை அரசிடம் உள்ளது – ஏனையோர் தலையிட முடியாது

அமெரிக்க இராஜாங்க செயலாளர் றொபர்ட் ஓ பிளேக்குக்கும் ஏனையவர்களுக்கும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு உரிமையில்லை என்று தொழினுட்ப அணுவலுத் துறை அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். பீபீசி யின் சிங்கள சேவைக்கு அண்மையில் வழங்கிய செவ்வையொன்றில் ஐக்கிய நாடுகள் மனித உரிமையின் தீர்மானப் படி பொறுப்புக் கூறுவதையும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதையும் இலங்கை உறுதிப்படுத்த வேண்டும் என றொபர்ட் ஓ பிளேக் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே அமைச்சர் இக்கருத்தை முன்வைத்திருந்தார். நாட்டின் உள்ளகப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசிடம் சிறந்த பொறிமுறையொன்று உள்ளது. அதனடிப்படையில் செயற்பாட்டுத் திட்டமொன்றை அண்மையில் இலங்கை முன்வைத்திருந்தது. அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் பிளேக் இரண்டு விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். முதலாவது இலங்கையின் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக அமெரிக்கா கதைப்பது மனசாட்சிக்கு விரோதமானது. ஏனெனில் மனிதத்துவத்தையும் மனித வரலாற்றையும் எடுத்துக் கொண்டால் அமெரிக்கா தான் மனித உரிமையை பலமுறை மீறியிருப்பது தெரியும். இரண்டாவது அமெரிக்காவால் தற்போது வரை பயங்கரவாதத்தை வெல்லமுடியாதுள்ளது. ஆனால் நாங்கள் வென்று விட்டோம். இவ்வெற்றியினூடாக அமெரிக்காவின் அனைத்து ஜெனரல்களாலும் பயங்கரவாதத்திற் கெதிராகவுள்ள போரை வெல்லமுடியாது என்று தோற்றுவிக்கப்பட்டிருந்த கருத்தை நாம் தகர்த்தெறிந்துள்ளோம். இதனூடாக அந்த ஜெனரல்களுக்கு மனோதிடத்தை வழங்கியுள்ளோம். இதன்பால் பயங்கரவாதத்தை வெல்வது எவ்வாறு என்பதை எங்களிடமிருந்தே அமெரிக்கா கற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்க யுத்தப்புத்தகங்களின் படி அமெரிக்க படைகளால் கொல்லப்பட்ட ஈராக்கியர்களின் எண்ணிக்கை 109,000 ஆக இருப்பது தெரியவந்துள்ளது. இத்தொகையினுள் ஆளில்லா விமானத் தாக்குதலினால் கொல்லப்பட்ட அப்பாவி பொதுமக்களின் தொகை 46,000 ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### தமிழ் நாட்டின் எதிர்ப்பையிட்டு அஞ்சத்தேவையில்லை

தமிழ் நாட்டு அரசியல் வாதிகளால் கிளறிவிடப்பட்டுள்ள தமிழ் நாட்டின் எதிர்ப்பலைகளுக்கு இலங்கை அஞ்சத்தேவையில்லை என மனிதவள சிரேட்ட அமைச்சர் D.E.W. குணசேகர தெரிவித்தார். எதிர்வரும் லோக் சபா தேர்தல்களை முன்னிட்டே தி.மு.க வும் அ.இ.அ.தி.மு.க வும் எதிர்ப்பலைகள் ஊடாக தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன என அவர் தெரிவித்தார். இதனையே இந்து நாளிதழுக்கு தி.மு.க வால் வெளியிடப்பட்ட அறிக்கை காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியாவின் உள்ளக செயற்பாடான இவ் எதிர்ப்பலைகளையிட்டு நாம் கடுமையான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

### பிரித்தானியாவால் வெளியிடப்பட்ட உல்லாசப்பயண ஆலோசனை எதிர்ப்புக்களைக் கிளப்பியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைக்கான உல்லாசப் பயண ஆலோசனைகள் தொடர்பாக இலங்கையின் வெளிவிவகாரத் துறை அமைச்சு பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக தனது கடுங்கண்டனத்தை அந்நாட்டுக்கு தெரிவித்துள்ளது. இரண்டு நாட்களுக்கு முன் வெளியிடப்பட்ட இவ் ஆலோசனை இலங்கையர்களிடையே மேற்குலகுக்கெதிரான பொதுவான எண்ணமொன்று மேலோங்கி இருப்பதால் உல்லாசப்பயணிகள் கவனமாக இருக்க வேண்டும் என்று எச்சரித்திருந்தது. இவ்எச்சரிப்பானது அடிப்படைகள் ஏதுமற்றது. அத்துடன் கண்ணிவெடி மீளகற்றுதல் தொடர்பாக அவ்வாலோசனைகளில் வெளியிடப்பட்டுள்ள விடயங்களும் இலங்கைக்குப் பொருத்தமானது அல்ல என மேலும் தெரியவருகின்றது.

## The Leader

### பொதுபல சேனாவுக்குத் தடை

பொதுபல சேனா, ராவணபலய, சிங்களராவய போன்ற அமைப்புக்களுக்கு தடை விதிக்கக் கோரும் அமைச்சரவைப் பத்திரமொன்றை தேசிய மொழிகள், சமூக ஒன்றிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைக்கவுள்ளார். அவ் அமைச்சரவைப் பத்திரமானது முன்வரைவாகத் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் இன்னும் இரு வாரங்களுக்குள் அப்பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்றும் தெரிவித்தார். இவ்வாறான குழுக்களை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடும் வகையில் சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதை இப்பத்திரம் முன்மொழிந்துள்ளது என்று அவர் தெரிவித்தார். இம்மூன்று அமைப்புக்களும் இனங்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கு மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்த முனைகின்றது என அவர் தெரிவித்தார். இலங்கையின் அரசியல் யாப்பின் படி இலங்கையர் எந்த மதத்தையும் பின்பற்றும் உரிமை கொண்டவர்களாகவுள்ளனர். அத்துடன் அவ்வாறு பின்பற்றுவதற்கு பயமுறுத்தல்கள் எவையும் எழுமாயின் அதனை காவல்துறைக்கு தெரியப்படுத்தி பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

### இலங்கை பெரிய பயங்கரம் ஒன்றை எதிர்கொள்கிறது இ.ம.உ ஆணைக்குழு

சமூகங்களிடையே சமய அடிப்படையிலான பதட்டமான சூழ்நிலை உருவாகி வருவதையடுத்து இலங்கை மிகப்பெரும் ஆபத்தை எதிர்கொள்ளப் போகின்றது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவிக்கின்றது. நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்காக சட்டம் ஒழுங்கை முறையாக கையாள்வது அரசின் கடமை எனவும் இவ்விடயம் தொடர்பாக கரிசனை கொண்டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இப்பதட்டமான சூழ்நிலையானது சமூகங்களிடையே நம்பிக்கையின்மையை கடுமையாக வளர்த்துக் கொண்டிருப்பதை தாம் அவதானித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது. இதனால் சமூகத்தில் கடும் தாக்கங்கள் நிகழ வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

### வாகரை மனித எச்சங்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பம்

கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வாகரையிலுள்ள மனிதப்புதைகுழி தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அந்தப்பிரதேசம் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக காவல்துறை அறிவித்துள்ளது. இவ்வாறானதொரு புதைகுழி அண்மையில் மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### அரசை விமர்சிக்கும் விவசாயிகள்

அரிசி வியாபாரத்தில் ஈடுபட்டுக்-கொண்டிருக்கும் இலங்கையில் அமைச்சர்கள் சிலரைக் காப்பாற்றுவதற்காக அரிசிச் சந்தையில் அரசு தகிடுதித்தம் செய்வதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன அரசை விமர்சித்துள்ளார். அறுவடை செய்த நெல்லை அரிசியாக சந்தைக்கு விநியோகம் செய்யும் காலம் தற்போது நடைபெறுவதாகவும் அதற்கான நியாய விலையினை அரசு தற்போது வரை நிர்ணயிக்காது உள்ளது என்பதையும் அவர் தெரிவித்தார்.

### பணியினைப் புறக்கணிப்போம் – தனியார் பேருந்துரிமையாளர்கள் வெருட்டல்

7 வீதக் கட்டண அதிகரிப்பை அரசு ஏற்றுக்கொள்ளாது விட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக தனியார் பேருந்துரிமையாளர்கள் வெருட்டல் ஒன்றை விட்டுள்ளனர். அகில இலங்கைப் பேருந்துரிமையாளர் சங்கச் செயலாளர் இதனைத் தெரிவித்ததுடன் டீசல் விலை அதிகரித்துள்ளதால் தனியார் போக்குவரவுக் கட்டணங்களை கட்டாயம் அதிகரிக்க வேண்டிய நிலையில் தாம் உள்ளதாகத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்

## திருமலை மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் - 2013

(நீதன்)

கடந்த வாரம் நடந்து முடிந்த திருக்கோணமலை மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் உள்ளக விளையாட்டுப் போட்டிகள் யாவும் நிறைவுற்றுள்ள நிலையில் கூடைப் பந்துப் போட்டிகளில் சென் அந்தனீஸ் கழகம் தமது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டியுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர் ஆகிய இரு பிரிவுகளிலும் மாவட்டப் பரிந்து போராடுவோராக (சம்பியன்களாக) சென் அந்தனீஸ் கழகம் வெற்றிவாகை சூடியுள்ளது.

இவ் வெற்றியை முறையே ஆடவர் பிரிவில் தம்மை எதிர்த்தாடிய பழைய இந்துக் கல்லூரி கழகத்தையும் மகளிர் பிரிவில் தம்மை எதிர்த்தாடிய மேரியன்ஸ் கழக அணியையும் வெற்றிகொண்டு பெற்றுக் கொண்டுள்ளது.

இதனடிப்படையில் மாவட்டக் கூடைப்பந்துப் போட்டியின் இரண்டாம் நிலையினை முறையே ஆடவர் பிரிவில் பழைய இந்துக் கல்லூரிக் கழகமும் மகளிர் பிரிவில் மேரியன்ஸ் கழகமும் சுவீகரித்துள்ளன. தொடர்ந்து மூன்று வார இறுதி நாட்களில் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திருமலை மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் எதிர்வரும் 06ம் மற்றும் 07ம் திகதிகளில் காற்பந்துப் போட்டிகளும், கபடிப் போட்டிகளும், கைப்பந்துப் போட்டிகளும் ஏகாம்பரம் விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகள் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர். டிசில்வா அவர்களின் மேற்பார்வையின்கீழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ச. விஜயநீதன் அவர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது




## தொடர்ந்தும் முதலிடத்தில் இலங்கை

சர்வதேச இருபதுக்கு இருபது மட்டைப்பந்து போட்டிகளின் தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணி தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்து வருகின்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டதன் மூலம் இவ் வாய்ப்பை மேலும் உறுதிப்படுத்திக்கொண்டது இலங்கை.

இத்தரப்படுத்தலில் மேற்கிந்திய அணி இரண்டாம் இடத்திலும் இந்திய அணி மூன்றாம் இடத்திலும் பாக்கிஸ்தான் அணி நான்காம் இடத்தையும் பெற்றுள்ளன. ஐந்தாம், ஆறாம், ஏழாம் இடங்களை முறையே இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணிகள் பெற்றுள்ளதோடு பின்வரிசையில் நியூசிலாந்து, பங்களாதேஷ், அயர்லாந்து மற்றும் சிம்பாபே அணிகள் காணப்படுகின்றன.



## ஆட்டத்தின் தன்மை மாறாது - குமார சங்கக்கார -

நாங்கள் இங்கு வருவதையோ, விளையாடுவதையோ தடை செய்திருக்கலாம். ஆனால் விளையாட்டோ, ஆட்டத்தின் தன்மையோ இதனால் மாறாது என இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணித் தலைவருமான குமார் சங்கக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணியின் தலைவரான இலங்கையின் நட்சத்திர வீரர் குமார் சங்கக்கார நேற்று இந்தியாவில் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்...

சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாடத் தடை செய்யப்பட்டுள்ளது. அரசியல் பிரச்சினைகள் நாங்கள் இங்கு வருவதையோ, விளையாடுவதையோ தடை செய்திருக்கலாம். ஆனால் விளையாட்டோ, ஆட்டத்தின் தன்மையோ இதனால் மாறாது.

இந்த சூழ்நிலை, இலங்கை வீரர்களுக்கு வித்தியாசமாகவும், க'டமானதாகவும் இருக்கின்றது. ஆயினும், நாங்கள் இங்கே விளையாடத்தான் வந்துள்ளோம்.



சென்னையில் எங்கள் வீரர்கள் விளையாடமாட்டார்கள் என்பதை இலங்கை கிரிக்கெட் சபை தெளிவுபடுத்தி விட்டது.

நாங்கள் இலங்கை அணியின் பிரதிநிதிகளாகவும், எங்களைத் தேர்வு செய்த அணிகளுக்காகவும் விளையாட வந்துள்ளோம். இந்தியா என்பது சென்னையையும், தமிழ்நாட்டையும் தாண்டியது. மற்ற இடங்களில் ரசிகர்கள் எங்களை வரவேற்கவே செய்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நடிகர் ஷாருக்கானுக்கு தடை நீடிக்கிறது

கடந்த ஆண்டு குடிபோதையில் ரகளை செய்த கொல்கத்தா அணியின் உரிமையாளர் பொலிவுட் நடிகர் ஷாருக்கானுக்கு மும்பை வான்கடே மைதானத்தில் நுழைய விதிக்கப்பட்டுள்ள 5 ஆண்டு தடை ஆறாவது ஐ.பி.எல். தொடரிலும் தொடருமென மும்பை கிரிக்கெட் சங்கம் (எம்.சி.ஏ.) அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது. இந்த வெற்றியைக் கொண்டாடுவதற்காக போட்டி முடிந்த பின் கொல்கத்தா அணியின் உரிமையாளர் ஷாருக்கான் மைதானத்துக்குள் செல்ல முயன்றார். அப்போது பாதுகாவலர்கள் தடுத்தனர். இதனால் ஆத்திரமடைந்த 'ாருக்கான் எம்.சி.ஏ. நிர்வாகிகள் மற்றும் பாதுகாவலர்களை கடுமையான வார்த்தைகளால் திட்டினார்.

இதுகுறித்து 'ாருக்கான் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின் அப்போதைய எம்.சி.ஏ. தலைவர் விலாஸ்ராவ் தேஷ்முக் தலைமையில் நடந்த நிர்வாகிகள் குழு அவசரக் கூட்டத்தில் 'ாருக்கானுக்குக் கண்டனம் தெரிவித்து 5 ஆண்டுகள் வான்கடே மைதானத்துள் நுழைய தடை விதிக்கப்பட்டது. இத்தடை ஆறாவது ஐ.பி.எல். தொடரிலும் தொடருமென எம்.சி.ஏ. அறிவித்துள்ளது.

## மகளிர் தின நிகழ்வின் சலனப்படங்கள்








- கீத்

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.